பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 02 சனிக்கிழமை 17.06.2023 கதிர் 218

# ஆங்கிலத்தை தேசிய மொழியாக முன்னெடுக்க ஜனாதிபதி திட்டம்

## நேற்று அவரே அறிவிப்பு

அடுத்த 5 வருடங்களுக்குள் ஆங்கில மொழியை கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் மற்றும் அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக்கொடுத்து ஆங்கில மொழியையும் தேசிய மொழியாக கொண்டுச்செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்த்திருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஆங்கில மொழிக்கு மாத்திரம் மட்டுப்படாமல் சீனா ,ஜப்பான், அரபு உள் ளிட்ட மொழிகளையும் கற்றுகொள்வதற்கான வாய்ப் புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற 2018- 2022 கல்வியாண்டு தேசிய போதனாவியல் டிப்ளோ மாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழுங்கும் நிகழ்வில் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்வியற் கல்லூரிகளை உருவாக்கும் திட்டத்தின் நிறுவுனரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய பாடசாலைகளுக்கான 1729 நியமனங்களும் மேல் மாகாணத்திற்கான 626 நியமனங்களும் வழுங்கப்பட்டன. அதனையடுத்து ஏனைய 8 மாகாணங்களுக்குமான நியமனங்களும் வழுங்கப்பட்டதோடு மொத்தமாக இன்றைய தினத்தில் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

பட்டகாலிலேயே படும் கெட்ட குடியே கெடும் என்பார்கள் அதைப் போல ரெலோ தலைவருக்கு ஏதோ போதாத காலம். அவர் இரகசியமாகப் போகும் இடங்களிலெல்லாம் யாரோ ஒருவரின் கண்களில் எதேச்சையாகப்பட்டுவிட, அந்த வில்லங்கப் பயணங்கள், சந்திப்புக்கள் குறித்து எப்படியோ எங்கள் காதுகளுக்குச் செய்திகள் எட்டிவிட என்று அந்தப் போதாத காலம் தொடர்கின்றது.

அண்மையில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் அவரது வலதுகையான கட்சியின் பேச்சாளர் சுரேன் குருசாமியும் கொழும்பில் அமைந்துள்ள கிறிஸ்கட் சொகுசு மாடிக் குடியிருப்புக்குச் சென்றிருக்கின்றனர். செல்வம் அங்கு அவ்வப்போது செல்வதுண்டு. புலம்பெயர் தேசத்து தமிழ் ''டீல்'' மன்னர் ஒருவர் அங்கு ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துத் தங்கியிருக்கிறார். அவரைப் பார்ப்பதற்காக, கலந்துரையாடுவதற்காகச் செல்வதுண்டு.

அந்த நபரோ புலிகளுக்கும் ராஜபக்சக்களுக்கும் இடையிலேயே ''டீல்'' ☞ 2

## மட்டக்களப்பு மாநகர சபைக்கு புதிய ஆணையாளர் நியமனம்



(கே எ ஹமீட்)

மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளராக நடராஜா சிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் இந்த நியமனக் கடிதம் வழுங்கப்பட்டுள்ளது. ஜூன் 19 காலை புதிய ஆணையாளர் பதவியைப் பொறுப்பேற்றுக்கொள்வார் என்று தெரிவிக் கப்பட்டது.

இலங்கை நிருவாக சேவை (தரம் -1) உத்தியோகத்தரானநடராஜா,உலகவங்கி ☞ 13

## பலாலி விமான நிலைய விரிவாக்கம் தொடர்பில் அமைச்சர் குழு ஆராய்வு



பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் விரிவாக்கப் பணிகள் தொடர்பில் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா தலைமையிலான குழுவினர் நேற்று நேரில் ஆராய்ந்தனர்.

காங்கேசன் துறைமுகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பயணிகள் முனையத்தை திறந்துவைப்பதற்காக நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த அமைச்சர் தலைமையிலான குழுவினர் பலாலியிலும் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

பலாலி விமான நிலையத்தின் விரிவாக்கம் தொடர்பில் கடற்றொழில் நீரியல் வளத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற ☞ 2

## மண்மேடு சரிந்து வீழ்ந்து இருவர் பரிதாப மரணம்!

### நுவரெலியாவில் சோகம்

நுவரெலியா - வெதமன் வீதி பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

விருந்தகம் ஒன்றுக்கு மதில் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதையடுத்து,மண்ணில் புதையுண்ட இருவரும் குறித்த பகுதி மக்களால் மீட்கப்பட்டு நுவரெலியா ☞ 13

## ஊடக ஒடுக்குமுறைச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளவே முடியாது

### சாள்ஸ் எம்.பி. தெரிவிப்பு

ஊடக ஒடுக்குமுறைச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என இலங்கை தமிழ்அரசுக்கட்சியின்வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட பின் ஊடகங்களுக்குக்கருத்துத்தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடகத்தை ஆட்சியாளர்களுக்குஎதிராகசெயற்படாமல் தடுப்பதற்காக அல்லது ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு எதிராக செயற்படுவதற்காக ஊடக ஒடுக்குமுறை சட்டத்தை இந்த ஆட்சி நாடாளுமன்றத்தில் சமார்ப்பிக்கவுள்ளது. உண்மையில் ஊடக ஒடுக்குமுறைச் ☞ 13

## கூட்டமைப்பினரும் விக்னேஸ்வரனும் பௌத்தமயமாக்கலுக்குத் துணை

### கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

எஸ்.நிதர்ஷன்-

தமிழர் தாயகத்தில் ஆட்சியாளர்களால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு கூட்டமைப்பும் விக்கினேஸ்வரன் தரப்பும் துணை போவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் உள்ள தமது கட்சியின் தலைமை அலுவைகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார் அவர் அங்கு மேலும் ☞ 2

## கூப்பிட்டதும் விழுந்தடித்து ஓடிப்போய்விட்டு பின்னர் ஏமாந்ததாகக் கூறுவதில் பயனில்லை

### சம்பந்தனைக் கடுமையாகச் சாடுகிறார் கஜேந்திரகுமார்

எஸ்.நிதர்ஷன்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைத்தவுடன் ஏன் விழுந்தடித்துச் செல்கின்றீர்கள். நிபந்தனை எதுவும் விதிக்காமல் சென்றுவிட்டு பின்னர் ஏமாந்துவிட்டோம் எனக் கூறுவதில் அர்த்தமில்லை என்று முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட்டமைப்பிடம் கேள்விஎழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணம், கொக்குவிலில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டமைப்பினரைப் பொறுத்தவரையில் இந்தியாவுடன் பேசாமல் அவர்கள் இயங்குவதில்லை. இந்தியாவில் ஆட்சியில் உள்ளவர்கள் பௌத்தம், இந்து என்பவற்றை ஒரே மாதிரியாகக் கருதுபவர்கள். ஆகையினால் ஈழத்தில் உள்ள இந்து -பௌத்த மோதலில் அவர்கள் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை.

மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள் என்ற வகையில் சம்பந்தனும் அவரோடு இணைந்தவர்களும் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். அதனை விடுத்து ரணில் ☞ 13

## தெற்கிலுள்ள பல்கலைக்கழங்களில் யாழ். மாணவர் இருவர் திடீர்ச் சாவு

### பொறியியல் பீடத்தைச் சேர்ந்தவர்கள்

ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களில் கற்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் மூன்றாம் வருடத்தில் கற்றுவரும் மாணவன் ஒருவர் விடுதியில் உயிரிழந்தார். அவரது சடலம் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று மீட்கப்பட்டது என்று மஹரகம பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை - நாரந்தனை வடக்கு பகுதியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் அபிநஜன் (வயது 23) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

பொரலஸ்கமுவ - கட்டுவல பிரதேசத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தால் வாடகை அடிப்படையில் எடுக்கப்பட்ட ☞ 13

## காங்கேசன்துறை பயணிகள் முனையம் அமைச்சரால் நேற்று திறந்து வைப்பு

இலங்கை துறைமுக அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட காங்கேசன்துறை நவீன பயணிகள் முனையம் நேற்று கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வா வினால் வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டது.



கடற்றொழில் அமைச்சர், இராஜாங்க அமைச்சர், யாழ் இந்தியத் துணைத் தூதுவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கப்பல்துறை அமைச்சின் செயலர், துறைமுகங்கள் அதிகார சபையின் அதிகாரிகள், வட பிராந்திய கடற்படைத் தளபதி, யாழ். மாவட்டச் செயலர், கடற்படை உயர் அதிகாரி கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். ☞ 2

## ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு புதனன்று

சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்த்தன தலைமையில் கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் ஜூன் 20 முதல் 23 வரையான நாடாளுமன்ற அமர்வு வாரத்தில் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பை எடுத்துக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் ஜூன் 20 செவ்வாய்க்கிழமை மு.ப . 9.30 மணிக்குக் கூடவிருப்பதுடன், மு.ப 10.30 மணி வரை வாய்மூல ☞ 13

## வவு. வடக்கு தமிழ் பிரதேச செயலகத்துடன் 4 சிங்களக் கிராமங்களை இணைக்க முடிவு

வவுனியா மாவட்ட எல்லை மீள் நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் 4 சிங்களக் கிராமங்களை வவுனியா வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்துடன் இணைக்க முடிவு செய்யப்பட்டது.

வவுனியா மாவட்ட மேலதிக செயலர் தி.திரேஸ் குமார் தலைமையில் நடந்த கலந்துரையாடலில், வவுனியா மாவட்டத்தில் உள்ள மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு சில கிராம அலுவலர் பிரிவுகளை பிரிப்பதற்கும், சில பிரிவுகளை இணைப்பதற்கும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.



வவுனியா மாவட்டத்தில் உள்ள மக்கள் நிர்வாக நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளும் பொருட்டு வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் பட்டாணிச்சூர், வேப்பங்குளம், பண்டாரிக்குளம், கூமாங்குளம், உக்குளாங்குளம், மகாறம்பைக்குளம் என்பனவும் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் ☞ 13

## வலி. வடக்கில் நடக்கவுள்ள காணி அளவீடுகள் தொடர்பில் பரபரப்படையத் தேவையில்லை

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

வலி வடக்கில் உள்ள தனியார் காணிகளை சட்ட ரீதியாக மக்களிடம் கையளிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவுள்ள காணி அளவீடுகள் தொடர்பில் மக்கள் பரபரப்படையத் ☞ 13



காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பேசியவர் என்ற வரலாற்றுப் பெருமைக்குரியவர். நீண்ட காலமாக அவர் அந்த சொகுசு மாடிக் குடியிருப்பில் தங்கியிருக்கிறார். ஆனால் இந்தத் தடவை செல்வமும் சுரேனும் அவரிடம் செல்லவில்லை. அந்தக் குடியிருப்பின் 27 ஆவது மாடியில் உள்ள ஒரு வீட்டுக்குச் சென்றிருக்கிறார்கள்.

ஓடி விசாரித்துப் பார்த்தால், அது முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் மருமகனது வீடு என்று தெரிந்தது. அங்கு ஏன் சென்றார்கள், என்ன பேசினார்கள் என்கிற விவரம் எதுவும் தெரியவரவில்லை. ஆனால் ஒன்று மட்டும் தெரியவந்தது, அது தற்செயலானதாகவும்கூட இருக்கலாம். இருப்பினும் அண்மையில் தமிழ் அரசியல் பரப்பில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நெடுங்கேணி நயினாமடு சீனித் தொழிற்சாலைத் திட்டம் குறித்து முன்மொழிவில், தாய்லாந்தில் பதிவு செய்யப்பட்ட சுடெக்ஸ் சீனித் தொழிற்சாலையின் இயக்குநராகப் பெயரிடப்பட்டுள்ளவர் மைக் எஸ்.மொகமட்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் மருமகனது பெயரும் மொகமட். இந்த இரு மொகமட்டும் ஒரே நபர்கள்தானா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. இருந்தாலும் நாங்கள் தேடியவரையில் இந்த ஒரு ஒற்றுமையைக் கண்டுபிடித்தோம்.

இவர்கள் அங்கு சென்றதும், 27ஆம் மாடியில் அமைச்சரின் மருமகனது வீட்டுக்குச் சென்றதும் தற்செயலாக ஒருவரின் கண்களில் படப்போக அது எங்கள் காதுகளுக்கும் வந்து சேர்ந்தது. அதை அவர்களது போதாத காலம் என்பதா, எங்களது நல்ல காலம் என்பதா என்று நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள் வாசகர்களே! ஏனெனில் இனிச் சொல்ல வருவதும் அதுபோன்றதொரு தற்செயல் நிகழ்வினால் எங்கள் காதுகளை வந்தடைந்த மற்றொரு சம்பவமே.

இது சில வாரங்களுக்கு முன்னர் நடந்த நிகழ்வு. நெதர்லாந்துத் தூதுவரைச் சந்திப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கொழும்பிலுள்ள சங்கரிலால் அதிசொகுசு விடுதிக்குச் சென்றுள்ளார். சந்திப்பை முடித்துக்கொண்டு வெளியேறும் சமயம் அங்கே சீனர்களின் நடமாட்டம் அதிகம் இருப்பதைக் கண்டுள்ளார். என்ன ஏது யாரிடம் வினாவலாம் என நாலுபக்கமும் தேடிய சமயம் அங்கே நின்ற இலங்கைக்கான சீன நாட்டுத் தூதரகத்தின் அதிகாரி ஒருவர் சுமந்திரனை அடையாளம் கண்டுகொண்டார்.

அவர் தங்கள் அழைப்பின் பேரில் அங்கு வந்து தங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார் என்று தவறாக விளங்கிக்கொண்ட அந்தச் சீன அதிகாரி, சுமந்திரனை நாடி அவரை அன்போடு வரவேற்று இன்றா உங்களுக்கும் சந்திப்பிற்கு நேரம் ஒதுக்கியுள்ளனர், உங்கள் சக உறுப்பினர் ஞாயிறு இரவு உணவுடன் வந்து சந்தித்து சென்றாரே என்றிருக்கிறார் வினயமாக.

இந்த விடயத்தை தன் சகாக்கள் மத்தியில் சொல்லி நல்லவேளையாக சீனர்களிடம் மாட்டிக்கொள்ளாமல் மெல்ல நழுவி வந்துவிட்டேன் என்று சிரித்திருக்கிறார் சுமந்திரன். அதுவும் எங்கள் காதுகளை எட்ட அப்படிச் சீனர்களைச் சந்தித்த சுமந்திரனின் சகா யார் என்று தேடினால், அதுவும் வந்து நின்றது என்னவோ ரெலோவில்தான்.

ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் கட்சியின் பேச்சாளர் சுரேனுமே அங்கு சென்று சீனர்களைச் சந்தித்து உரையாடியுள்ளனர் என்பதை ராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறிந்துகொள்ள முடிந்தது. அதுவென்றும் பெரிய காரியமாக இருக்கவில்லை. சீன அயலுறவுத் துறை துணை அமைச்சர் சுன் வீடொங், இலங்கை வந்திருந்தபோது அவருடன் வந்திருந்த சீன வர்த்தகர்கள் கூட்டம்தான் சங்கரில்லால் விடுதியில் தங்கியிருந்துள்ளது. சந்திப்புக்களையும் நடத்தியுள்ளது. அவர்களுடனேயே ரெலோ பிரதிநிதிகளும் சென்று பேசி இருக்கின்றனர்.

அவர்கள் அங்கு ஏன் சென்றார்கள், என்ன பேசினார்கள் என்று தேடிச்சென்றபோது, பக்கத்துவீட்டு இராஜதந்திரி ஒருவர் கேட்ட கேள்வி எனக்குப் பெரும் ஆச்சரித்தை ஏற்படுத்தியது, செல்வம் அடைக்கலநாதன் அங்கு சென்றார் என்பதுகூடப் பரவாயில்லை அவர் சீன - இலங்கை நாடாளுமன்ற நட்புறவுக் குழுவின் உப தலைவர். அந்த அடிப்படையில் அவர் சென்றிருக்கலாம், ஆனால் சுரேன் ஏன் சென்றார்? என்பதுதான் அந்தக் கேள்வி. எனக்கு ஆச்சரியம் ஏற்படுத்தியது அந்தக் கேள்வி அல்ல. எங்களைவிட எங்கள் பிரதிநிதிகளை வேவுபார்ப்பதில் பக்கத்துவீட்டுக்காரர்கள் காட்டும் தீவிரம்தான் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

எனக்குத் தெரிந்த வரைக்கும் இதிலும் காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த கதைதான். சீனித் தொழிற்சாலையில் லண்டன் முதலீட்டாளர்கள்தான் முதலிடவுள்ளார்கள் என்று ரெலோவின் பக்கத்தில் இருந்து கதை சொல்லப்பட்டாலும் அதன் பின்னணியில் சீன முதலீட்டாளர்கள்தான் உள்ளனர் என்று உறுதியாக நம்பப்படுகின்றது. (இதை நாங்கள் சொன்னால், எம்மை மஞ்சள் பத்திரிகை என்று சகபாடிகளிடம் திட்டுவார் சுரேன்) அதுவும் சீனா இதுவும் சீன வர்த்தகர்கள் என்பதுதான் இப்போதைக்கு எங்களுக்குத் தெரிந்த ஒற்றுமை.

அதி சொகுசு தொடர்மாடியில் 27ஆம் தள வீடு, சங்கரில்லால் சொகுசு விடுதி என்று எல்லாவற்றையும் கூட்டிக்கழித்து வாசகர்களான நீங்களாக ஒரு சீனக் கணக்குப் போட்டால் அதற்கு நான் எந்தவகையிலும் பொறுப்பல்ல. இந்திய - சீனக் கணக்கில் ஏதாவது விடை கிடைத்தால் மட்டும் உங்களுக்குச் சொல்கின்றேன்.

**இடிமின்னல்**

## பலாலி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், யாழ்ப்பாண மாவட்டச் செயலர், யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதுவர், விமான நிலைய உயர் அதிகாரி கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இன்றைய கலந்துரையாடலில் விமான நிலையத்தின் ஓடுபாதையை வடக்குப் பக்கமாக விரிவாக்குவதுடன் விமான சேவையை அதிகரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் பெரிய விமானங்கள் வந்து இறங்குவதற்கு ஏற்ற வகையில் அதனை விரிவாக்கம் செய்வது குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. அதிகளவு ஆசனங்களை கொண்ட விமானங்களைச் சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் இந்த விமான நிலையத்ததின் ஊடாக அதிக அந்நிய செலாவணியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

பெரிய விமானங்கள் வந்திறங்க வேண்டுமாயின் ஓடுதளம் விரிவாக்கப்படவேண்டும் என்ற விடயம் ஆராயப்பட்டபோது, மக்களின் காணிகளை இதற்காகச் சுவீகரிக்காமல் வடக்குப்பக்கமாக, கடலினுள் அதனை விரிவாக்கும் சாத்தியங்கள் குறித்துக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தக் கருத்துக்களை வலியுறுத்தினார்.

அங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மக்களுக்குப் பாதிப்பில்லாதவாறு விமான நிலைய விரிவாக்கம் மேற்கொள்ளப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

## காங்கேசன்துறை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறப்பு விழாவையொட்டி இந்தியாவில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகளுடன் ஒரு கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது. கப்பலில் வந்தடைந்த இந்தியச் சுற்றுலாப் பயணிகளை அமைச்சர் அடங்கிய குழாம் வரவேற்றதோடு கப்பலின் கப்டனுக்கு நினைவுப் பரிசிலும் கையளிக்கப்பட்டது.

காங்கேசன்துறைக்கும் இராமேஸ்வரத்துக்கு இடையில் பயணிகள் கப்பல் சேவையினை ஆரம்பிப்பது தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய அரசுகளுக்கு இடையில் தொடர்ச்சியாக பேச்சு இடம்பெற்று வருகின்றது என்று நிகழ்வில் கருத்துத் தெரிவித்த கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறீபாலடி சில்வா தெரிவித்தார், .

இராமேஸ்வரம் பகுதியில் சில வேலைத்திட்டங்களைக் கப்பல் சேவை தொடங்க முன்னர் முன்னெடுக்க வேண்டி இருப்பதால் தற்போதைய சூழ்நிலையில் உடனடியாக கப்பல் சேவினை ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுகின்றது, எனினும் இந்திய மற்றும் இலங்கை அரசுகளின் தொடர் முயற்சியின் பயனாக விரைவில் கப்பல் சேவையைத் தொடங்கக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன - என்றார் (O3)

## கூட்டமைப்பினரும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

பௌத்தர்களே இல்லாத இடத்தில் விகாரைகளை அமைப்பதும் தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதும் ஆக்கிரமிப்பும் தமிழர்களின் பாரம்பரிய காணிகளில் திட்டமிட்ட குடியேற்றங்களைச் செய்கின்ற நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சிங்கள பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகளை தமிழர் தாயகத்தில் ஆட்சியாளர்கள் திட்டமிட்டு மேற்கொண்டுவருகின்ற நிலையில் எமது மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்கின்ற சில தரப்புக்களும் இதனை மக்களிடத்தே கொண்டுசென்று எதிர்க்காது ஆதரவளிக்குகின்றமை போன்று செயற்படுகின்றதை நேரடியாகவே அவதானிக்க கூடியதாக உள்ளது.

இது மாத்திரமல்லாமல் ஆட்சியாளர்களின் இத்தகைய சிங்கள பௌத்த மயமாக்கலிற்கு ஏதோவொரு வகையில் இந்தத் தரப்புக்கள் ஆதரவையும் வழங்கி வருகின்றன என்பதை எமது மக்கள் சரியான முறையில் விளங்கிக்கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது.

தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த இடங்களில் தொல்பொருள் என்ற போர்வையில் நிலஆக்கிரமிப்பு தொடர்கிறது. குறிப்பாக இங்கு தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த இடங்களில் தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் அது பௌத்த சின்னங்கள் பௌத்த அடையாளங்கள் என்றவாறாக அபகரிப்பும் ஆக்கிரமிப்பும் தொடர்கிறது.

இங்கு தமிழ் பௌத்தர்களே வாழவில்லை எல்லாமே சிங்கள பௌத்தம் என்பது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி வருகின்ற இன்றைய சூழலில் அண்மையில் ஜனாதிபதிக்கும் கூட்டமைப்பிற்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்ற பின்னர் இதற்கு மாறானதொரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தி எம்மவர்களே துணை போகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதாவது இங்கு தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என ஜனாதிபதி கூறியதாகவும் தொல்பொருள் திணைக்களம் பணிப்பாளரை ஜனாதிபதி பதவி விலகச் செய்தார் என்று ஜனாதிபதியைப் புகழ்கின்ற நிலைமையை ஏற்படுத்தப் பார்க்கின்றனர்.

ஜனாதிபதியினதும் ஆட்சியாளர்களினதும் சிந்தனையும் செயற்பாடுகளும் பௌத்த மேலாதிக்கம் கொண்டதாகவே இருக்கின்றது. இத்தகைய சிந்தனை செயற்பாடுகளில் இருந்து எமது பாராம்பரியங்களை பாதுகாத்துக் கொள்கின்ற நடவடிக்கையே நாங்கள் முன்னெடுக்க வேண்டியது அவசியமானது. அதனை விடுத்து ஆட்சியாளர்களின் இத்தகைய சிந்தனை செயற்பாடுகளுக்கு நேரடியாவோ மறைமுகமாகவோ ஆதரவை கொடுப்பது ஆபத்தானது - என்றார்.

## ஆங்கிலத்தை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

7342 டிப்ளோமாதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

அங்கு மேலும் தெரிவித்ததாவது:

'நியமனங்களை பெற்றுக் கொள்ளும் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். கொவிட் பரவல் மற்றும் நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக 2 வருடங்கள் மேலதிகமாக கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகியிருந்திருந்தீர்கள். உங்களுக்கு கற்பித்த பீடாதிபதிகளுக்கும் விரிவுரையாளர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன்.

1985 களில் நான் கல்வி அமைச்சராக இருந்தபோதே கல்வியற் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது கல்வியற் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு 38 வருடங்களாகின்றன. இந்த 38 வருடங்களில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

அன்று கையடக்கத் தொலைபேசிகள் இருக்கவில்லை. சிறிதளவு கனிணிகள் மாத்திரமே இருந்தன. அவை அனைத்தும் அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் மாத்திரமே தயாரிக்கப்பட்டன. இன்று அந்த நிறுவனங்கள் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளன. அந்த உற்பத்திகள் சீனா அல்லது இந்தியா விலேயே இடம்பெறுகின்றன.

அந்த இருநாடுகளிலுமே கனிணி உற்பத்தி துறை சார் நிபுணத்துவம் காணப்படுகின்றன. அவற்றில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதோடு அறிவியலும் இணைந்துள்ளது.

நாம் 21ஆவது நூற்றாண்டில் இருக்கின்றோம். ஆனால் எம்மிடம் 20 ஆம் நூற்றாண்டின் கல்வி முறைமையே உள்ளது. அதனால் 21ஆவது நூற்றாண்டிற்கு அவசியமான கல்வி முறைமையை கட்டமைப்பதற்காக அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும்.

இது பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்திருந்த நாம் மீண்டெழும் நேரமாகும். இந்நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்பட்டிருந்தாலும் பொருளாதார நெருக்கடி ஏற்படாதவாறு செயற்பட்டால் மாத்திரமே வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்த முடியும். அதேபோல் ஏற்றுமதியால் வருமானம் ஈட்ட வேண்டும். நாட்டிற்கு பொருத்தமான கல்வி முறையொன்றினையும் உருவாக்க வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்தும் அதே நேரம் ஏற்றுமதி பொருளாதாரத்தை வலுவூட்டக்கூடிய வகையிலான கல்வி முறையொன்றினையும் தயாரிக்க வேண்டியது அவசியமாகும். பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக நாம் கொண்டுள்ள முதன்மை வளமாக மனித வளமே காணப்படுகின்றது. அந்த வளத்தை ஆசிரியர்களே பலப்படுத்துகின்றனர். அதனால் ஆசிரிய வளத்தையும் நாம் மேம்படுத்த வேண்டும்.

கல்விக்கான தனியான தொரு அமைச்சர்கள் குழுவை நாம் நியமித்துள்ளோம். கல்வித் தொடர்பில் கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரங்களை அவர்களுக்கு வழங்குவோம். தற்போது அது தொடர்பிலான அறிக்கையொன்றை தேசிய கல்விக் குழு எம்மிடத்தில் கையளித்துள்ளது.

அதற்கு மேலதிகமாக பிரமரின் செயலாளர் தலைமையில் கல்வி நவீனமயபடுத்தல் தொடர்பிலான குழுவொன்று ஒவ்வொரு துறைசார் குழுக்களையும் பிரதிநித்துவப்படுத்தும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த அனைத்து அறிக்கைகளும் ஒகஸ்ட் மாதத்திற்கு முன்பாக எனக்கு கிடைக்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளேன். அதனூடாக 21ஆம் நூற்றாண்டிற்கு பொருத்தமானதும் 2050 ஆம் ஆண்டுக்கு பொருத்தமானதுமான கல்விக் கொள்கையொன்றை உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

தரம் 8இல் பரீட்சையில் சித்தி பெற்றமை மற்றும் க.பொ.தசாதாரணதர பரீட்சையில் சித்திபெறவில்லை என்ற காரணங்களுக்காக மாணவர்களின் கல்வியை இடைநிறுத்த அனுமதிக்க கூடாது. அதனால் அனைத்து மாணவர்களுக்கும் 13வருட பாடசாலை கல்வியை கட்டாயமாக வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தை சார்ந்துள்ளது. அரசாங்கம் என்ற வகையில் அதனை நாம் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளோம். அதேபோல் அதற்கு பொருத்தமான வகையில் பாடசாலை கல்வியையும் கட்டமைக்க வேண்டும்.

அதேபோல் சங்கீதம், கலைகள் மீது ஆர்வம் கொண்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களது தெரிவுகளையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். குறிப்பாக ஸ்கெண்டிநேவிய நாடுகளில் அவ்வாறான வாய்ப்புக்கள் உள்ளன. அதுபோன்ற வேலைத்திட்டங்களுக்கு நாமும் செல்ல வேண்டும். உயர்தர பாடங்கள் மாத்திரமின்றி வாழ்க்கைக்கு அவசியமான கல்வியை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு அதனூடாக கிட்டும்.

13 வருட கல்வியை வழங்குகின்ற போது சாதாரண தர பரீட்சை அவசியமா என்ற கேள்வி எழுகின்றது. சாதாரண தர பரீட்சை அவசியமில்லை என்பதே பலரதும் நிலைப்பாடாக உள்ளது. உலகின் அபிவிருத்தி அடைந்த நாடாக விளங்கும் அமெரிக்காவே அதற்கு உதாரணமாகும். அங்கு சாதாரண தர பரீட்சையும் இல்லை உயர்தர பரீட்சையும் இல்லை.

நம்மால் அதனை செய்ய முடியும் என நான் நம்பவில்லை. இருப்பினும் சாதாரண தர பரீட்சை தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டியது அவசியமாகும். அதனை மாற்று முறையில் நடத்துவதா அல்லது சித்தி பெறல், சித்தி பெறாமையை அடிப்படையாக கொண்டு நடத்துவதா என தீர்மானிக்க வேண்டும்.

13 வருட கல்வியை பெற்றுக்கொடுக்கின்ற போது அதற்கு உகந்த வகையில் பரீட்சைகளை நடத்த வேண்டிய பொறுப்பு எம்மை சார்ந்துள்ளது. தற்போது பரீட்சை தினங்கள் மாறுகின்றன ஜனவரி முதல் டிசம்பர் வரையில் ஒவ்வொரு திகதியில் உயர்தர பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. அதேபோல் டிசம்பர் மாதத்தில் பரீட்சை இடம்பெறுவதற்கான சட்ட ஏற்பாடுகளை செய்துக் கொடுக்க வேண்டியது அவசியமாகும். அதன்படி பரீட்சைகளை உரிய நேரத்தில் நடத்த வேண்டிய பொறுப்பு பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஏற்படும்.

பல்கலைக்கழக பட்டத்தை பெற்றுக்கொள்ளும்போது எனக்கு 21வயது. குறைந்தபட்சம் 23 வயதிலாவது பல்கலைக்கழங்களிலிருந்து வெளியேற வேண்டியது அவசியமாகும். அதேபோல் இன்று பல புதிய பாடத்திட்டங்கள் உள்ளன. ஆங்கில கல்வி மிகவும் அவசியமானதாக மாறியுள்ளது. ஆங்கில மொழி தெரியவில்லை என்ற நிலைமை எவருக்கும் ஏற்படக்கூடாது.

19 - 20 ஆம் நூற்றாண்டுகளில் சிங்கள எழுத்தாளர்கள் மற்றும் இலக்கியவாதிகள் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினர். வண. ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல நாயக்க தேரர், ஈ.ஆர்.சரத்சந்திர, மார்ட்டின் விக்ரமசிங்க ஆகியோர் அனைவரும் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற எழுத்தாளர்கள் ஆவர்.

அதனால் அனைவருக்கும் ஆங்கில கல்வியை வழங்கும் வேலைத்திட்டத்தை நாம் உருவாக்க வேண்டும். அதற்காக முதலில் ஆங்கில ஆசிரியர்களை பணியமர்த்த வேண்டும். அடுத்த 05 வருடங்களுக்குள் அந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். அதன் பின்னர் ஆங்கில மொழியை தேசிய மொழியாக நடைமுறைப்படுத்த முடியும்.

ஆங்கிலம் அரசகரும மொழியாக இல்லாவிட்டாலும் பல்வேறு ஆவணங்கள் இன்னும் ஆங்கில மொழியிலேயே பேணப்படுகின்றன. நாம் ஒரு இடத்தில் முடங்கிக் கிடக்காது சீன மொழி, ஜப்பானிய மொழி, ஹிந்தி, அரபு போன்ற மொழிகளையும் கற்பதற்கான வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். அதேபோல் எமது பல்கலைக்கழக கட்டமைப்பினையும் நவீன மயப்படுத்த வேண்டும்.

பல்கலைக்கழகத்தில் கல்வியை தொடரும் காலத்தை 3 வருடங்களா

தொடர்ச்சி 13ம் பக்கம்



காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியாவில் கோர விபத்து: தாயும் மகளும் உயிரிழப்பு!





வவுனியாவில் இடம்பெற்ற கோர விபத்தில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர். வவுனியா கண்ணாட்டி பகுதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) டிப்பர் ரக வாகனம் ஒன்று மோதியதால் தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர் என பறையநாலங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று ாலை 7 மணியளவில் பூவரசங்குளம் பாடசாலைக்கு செல்வதற்காக குறித்த தாயும் மகளும் அவர்களது வீட்டுக்கு முன்பாக உள்ள வீதியில் பஸ்ஸுக்காகக் காத்திருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது, வவுனியாவில் இருந்து மன்னார் பகுதி நோக்கி வேகமாக பயணித்த டிப்பர் ரக வாகனம் வீதியை விட்டு இறங்கி கரையில் நின்றவர்கள் மீது மோதியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவத்தில் அதேபகுதியைச் சேர்ந்த சிவலோகநாதன் சுபோகினி வயது 36, டினுசிகா வயது 6 என்ற இருவரே உயிரிழந்துள்ளனர்.

குறித்த டிப்பர் ரக வாகனத்தில் மூவர் பயணித்திருந்த நிலையில், விபத்தை அடுத்து அவர்களில் ஒருவர் தப்பிச்சென்றுள்ளார் எனப்பொலிசார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் ஏனைய இருவரையும் ஊர்மக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

விபத்தையடுத்து பிரதேச மக்கள் டிப்பர் ரக வாகனத்தைத் தாக்கி சேதப்படுத்தியதுடன் அதனை எரிப்பதற்கு முயற்சித்ததால், அப்பகுதியில் குழப்பமான சூழல் ஏற்பட்டிருந்ததுடன் மன்னார் வீதியில் போக்குவரத்தும் சில மணிநேரங்கள் பாதிக்கப்பட்டிருந்தது.

எனினும் நிலமையைக் கட்டுப்படுத்தியதுடன் விபத்துத் தொடர்பான விசாரணைகளை பறையநாலங்குளம்பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (05)

## யாழ். பல்கலை முகாமைத்துவபீட மாணவர் 28 பேருக்கு உள்நுழைவுக்குத் தடை நீக்கம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் ஏற்பட்ட குழு மோதல் சம்பவத்தின் அடிப்படையில் உள் நுழைவுத் தடை விதிக்கப்பட்டிருந்த மாணவர்களில் 28 பேர் மீதான தடை பூர்வாங்க விசாரணைகளின் முடிவில் நீக்கப்பட்டுள்ளதுடன், அடையாளப்படுத்தப்பட்ட மூன்று மாணவர்கள் மீது தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்களின் 'மாகோஸ்' வார நிகழ்வுகள் கடந்த மாதம் 31 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் - இம்மாதம் 3ஆம், 4ஆம் திகதிகளில் இரண்டாம் வருட மாணவர்களுக்கும், மூன்றாம் வருட மாணவர்களுக்கும் இடையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில் ஏற்பட்ட தகராறு கைகலப்பாக மாறி மோதலில் முடிந்தது.

இதனால் மூன்றாம் வருட மாணவன் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட இரண்டாம் வருட மாணவர்கள் 16 பேருக்கும், மூன்றாம் வருட மாணவர்கள் 15 பேருக்கும் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், விடுதி உட்பட பல்கலைக் கழகத்தின் எந்தவொரு பகுதியினுள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான பூர்வாங்க விசாரணைகள் கடந்த வாரம் இடம்பெற்றது. விசாரணைகளின் முடிவில் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்கள் 03 பேரைத் தவிர ஏனைய 28 பேர் மீது விதிக்கப்பட்டிருந்த உள்நுழைவுத் தடை விலக்கப்பட்டுள்ளது என்று முகா மைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார்.

பூர்வாங்க விசாரணைகளின் போது அடையாளப்படுத்தப்பட்ட மாணவர்கள் பல்கலைக் கழக மாணவர் வதிவிடம் மற்றும் ஒழுக்கம் தொடர்பான பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழு விதிமுறைகளுக்கமைவாகப் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்று சபையால் முறையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், பூர்வாங்க விசாரணைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் பேரவைத் தீர்மானத்துக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (05)

## மன்னார் அல் அஸ்ஹர் ம.வி தேசிய பாடசாலை மாணவர்களுக்கான இடை நிறுத்தப்பட்ட பஸ் சேவையை உடன் ஆரம்பிக்க கோரிக்கை

மன்னார் அல் அஸ்ஹர் ம.வி தேசிய பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை அரச போக்குவரத்து சேவையின் மன்னார் வீதி ஊடாக முன்னெடுக்கப்பட்டு வந்த பஸ் சேவை திடீர் என எவ்வித முன் அறிவித்தலும் இன்றி இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் பாடசாலை மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துவருகின்றனர் எனப் பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை அரச போக்குவரத்து சேவையின் மன்னார் சாலை முகாமையாளர், வட பிராந்திய அத்தியட்சகர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு சென்ற போதும், அவர்கள் அசமந்த போக்குடன் செயற்படுகின்றனர் என விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் அல்-அஸ்ஹர். ம.வி தேசிய பாடசாலைக்கு கரிசல், புதுக்குடியிருப்பு,தாராபுரம் ஆகிய கிராமங்களை சேர்ந்த மாணவர்களின் நலன் கருதி குறித்த பஸ் சேவை முன்னெடுக்கப்பட்டு வந்தது.

கரிசலில் இருந்து புதுக்குடியிருப்பு, தாராபுரம் ஊடாக மாணவர்களை ஏற்றி வரும் குறித்த பஸ் காலை 7.20 மணி அளவில் மன்னார் பிரதேசச்செயலக வீதியை வந்தடையும். பின்னர் மாணவர்கள் அங்கிருந்து பாடசாலையைச் சென்றடைவார்கள்.

பாடசாலை முடிவடைந்த பின்னர் மதியம் 2.10 மணி அளவில் மன்னார் பிரதேச செயலக வீதியில் நிற்கும் மாணவர்களை ஏற்றிக்கொண்டு தாராபுரம் சென்று அங்கிருந்து புதுக்குடியிருப்பு மற்றும் கரிசல் கிராமங்களுக்குச் சென்று மாணவர்களை இறக்கி விடுவது வழமை.

எனினும், குறித்த இரு சேவைகளும் இடைநிறுத்தப்பட்டு சுமார் ஒரு மாதங்களைக் கடந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாகப் பாடசாலை அதிபர் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினர் பல தடவை எழுத்து மூலமாகவும், நேரடியாகவும் மன்னார் சாலை முகாமையாளருக்குத் தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என பாடசாலை நிர்வாகத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே, இடைநிறுத்தப்பட்ட சேவையை உடன் மன்னார் சாலை முகாமையாளர் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் பாடசாலை நிர்வாகத்தினர் இணைந்த எதிர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர். (05)

## யாழில் சிறுமிக்கு பாலியல் தொந்தரவு; 30 வயதுடைய சந்தேக நபர் கைது

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 10 வயதுச் சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றச்சாட்டின் கீழ் 30 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கணவனை பிரிந்து வாழும் பெண் ஒருவரது மகளுக்கே இவ்வாறு பாலியல் தொந்தரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த சிறுமி உறக்கத்தில் இருந்தபோது, குறித்த சந்தேகநபர் சிறுமியின் ஆடைகளைக் களைய முற்பட்டுள்ளார். இதனை சிறுமியின் தாயார் அவதானித்துள்ளார்.

அதன்பின்னர் அவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (05)



## யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் வாளொன்றுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியில் வாளொன்றுடன் இளைஞர் ஒருவர் வியாழக்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி, பாற்பண்ணை இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த இளைஞர் 3 அடிநீளமான வாளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.



இந்நிலையில், கைதான இளைஞரை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (05)

# சிறுதானிய உணவு ஊக்குவிப்பு கண்காட்சி யாழில் முன்னெடுப்பு!





சிறுதானிய உணவை ஊக்குவிக்கும் கண்காட்சியொன்று யாழ்ப்பாணம் திருநெல்வேலி அமைந்துள்ள விவசாய திணைக்களத்தில் இடம்பெற்றது.

சிறுதானிய உணவை ஊக்குவிக்கும் நாள் என்ற தொனிப்பொருளில் குறித்த கண்காட்சி வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டது.

சிறுதானிய உணவுகளான கம்பு, திணை, வரகு, சாமை என பலவகையான சிறுதானியங்களில் இருந்து தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

மேலும், சிறுதானியங்களில் இருந்து எவ்வாறு உணவு தயாரிப்பது என்பதும் இங்கு விளக்கமளிக்கப்பட்டது.

சிறு தாணிய உணவை வழங்கி தானியங்களை விற்பனை செய்து அவற்றின் ஊடாக ஏற்படும் போாக்கு நிலைமைகள் தொடர்பாகவும் இதன்போது காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் பயனாளிகள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆங்கிலத்தின் வகிபாகம்

இலங்கைபிரித்தானியர்களின்பிடியிலிருந்துவிடுபட்டு 75 ஆண்டுகளாகிவிட்டன. கிட்டத்தட்ட 300 ஆண்டுகள் ஆக்கிரமித்திருந்த பின்னர் அவர்களின் வெளியேற்றம் நிகழ்ந்திருந்தது. அந்த ஆக்கிரமிப்புக் காலம் தந்த எண்ண அடிமைத்தனத்தில் இருந்து இலங்கையில் வாழ்வோர் இன்றும்கூட முற்றிலுமாக விடுபட்டுவிட்டனர் என்று சொல்லமுடியாது. வெள்ளையாக இருப்பதே உயர்வு என்றும் ஆங்கிலம் தெரிந்தவர் அறிவாளி என்றும் எண்ண அடிமைத்தனத்தை இன்றும் சுமந்து திரிபவர்களாகவே பலரும் இருக்கின்றோம். இத்தகைய நிலையிலிருந்து மக்களை மீட்க மொழி ஒரு முக்கிய கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

சிங்களம் மட்டும் சட்டம் அந்தக் கோணத்தில் இருந்துதான் அணுகப்பட்டது. அந்தச் சட்டம் தமிழர்களை அரச உயர் பதவிகளில் இருந்து அகற்றுவதற்கும், ஆங்கிலேயர்களைத் தொடர்ந்து ஆங்கிலத்தை வைத்துத் தமிழர்கள் சிங்களவர்களை நிர்வாகம் செய்வதை நிறுத்துவதற்கும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், நாட்டு நிர்வாகம் சுதேச மக்களுக்கு நெருக்கமானதாக இருக்கவேண்டும் என்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.

அந்தச் சட்டத்தின் மூலம் பிரிட்டிஷ் இலங்கை மீண்டும் தமிழ், சிங்களம் என்று இரண்டாகப் பிளவுபட்டது என்பது வரலாறு. இரு இனங்களுக்கும் இடையில் இருந்த பிளவை தனிச் சிங்களச் சட்டம் கூர்மைப்படுத்தியது எவ்வளவிற்கு உண்மையோ அதுபோன்றே அது தமிழர்களையும் சிங்களவர்களையும் தேசிய இனங்களாக ஒற்றுமைப்படுத்துவதிலும் கணிசமான பங்களிப்பை ஆற்றியிருக்கிறது என்பதையும் மறுக்கமுடியாது.

75 ஆண்டுகள் கழித்து இப்போது ஆங்கிலத்தை தேசிய மொழியாக்கும் திட்டம் பற்றி அரசுத் தலைவர் ரணில்விக்கிரமசிங்க பேசியிருக்கிறார். காலனித்துவக் காலத்தில் இலங்கையை ஒற்றுமைப்படுத்தி வைத்திருந்த ஆங்கிலத்தை மீண்டும் கொண்டுவருவதன் மூலம் நாட்டை மீண்டும் ஒற்றுமைப்படுத்திவிட முடியும் என்கிற எண்ணக்கரு சிங்கள மேல்தட்டு வர்க்கத்தினரிடம் நீண்ட காலமாகவே இருக்கின்றது. இனப் பிரச்சினையை ஒரு மொழிப் பிரச்சினையாகவும், பொருளாதாரப் பிரச்சினையாகவும் மட்டும் நோக்குபவர்கள் மத்தியில் ஆங்கிலம் அதற்கான தீர்வு என்கிற எண்ணம் உண்டு. மொழியும் பொருளாதாரமும் இனப் பிரசச்சினையின் உட்கூறுகளே அன்றி அவை மட்டுமே மூலாதாரம் அல்ல.

75 ஆண்டுகளாகக் கூர்மைப்படுத்தப்பட்ட இனப் பிரச்சனை, இனங்களுக்கு இடையிலான பிளவு ஆங்கிலத்தைத் தேசிய மொழியாக்கி எல்லோரும் பேசத்தக்க மொழியாக்கிவிடுவதால் மட்டும் தீர்ந்துவிடப்போவதில்லை என்பதைப் புரிந்துகொள்ள இனப்பிரச்சினையின் மூலவேர்களை இன்னும் ஆழமாக ஆய்வு செய்யவேண்டியிருக்கும். அடிமைகளை நிர்வகிப்பதற்கான பொது மொழியாக சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஆங்கிலம் பெரும் பணியாற்றியிருக்கலாம். அதையே இப்போதும் அது செய்யும் என்று எதிர்பார்ப்பது அளவுக்கதிகமானது.

சிறிது காலத்திற்கு முன்னர் வரைக்கும் மும்மொழிக் கொள்கை என்பது பெயரளவில் நடைமுறையில் இருந்தது. அரச பெயர்ப் பலகைகளில் மும்மொழிகளும் காணப்படுவதைத் தவிர அதனால் ஏற்பட்ட பெரு மாற்றங்கள் என்று எதுவும் இல்லை. இப்போது ஆங்கிலம் தேசிய மொழி என்பதும் போகாத ஊருக்கு வழி தேடுவதைப் போன்றதுதான். ஆங்கிலம் உலகை அடைவதற்கான வழியாக இருக்கலாமே தவிர உள்ளநாட்டின் தீர்வாகிவிடமுடியாது.

ஆட்சியாளர்கள் இதனைக் கவனத்தில் கொள்ளவேண்டும். தாய்மொழிக் கல்விதான் உலகில் மிகச் சிறந்தது என்று ஆய்வுகள் நிரூபித்துள்ள நிலையில், சீனாவும் ஜப்பானும் கொரியாக்களும் அதற்கான சிறந்த முன்னுதாரணங்களாக இருக்கின்ற நிலையில் ஆங்கிலத்தை நோக்கிய நகர்வு எவ்வளவு புத்திசாலித்தனமானது என்பதை தீர்க்கமாக ஆய்வு செய்வது கட்டாயம்.

## விதியை மீறி மணல் ஏற்றிய உழவியந்திரங்கள் மாட்டின





(ஜே.பிரசாத்)

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பறங்கியாற்று பகுதியில்

அனுமதிபத்திர விதி முறைகளுக்கு மாறாக மாணல் ஏற்றிய குற்றச்சாட்டில் இரு இரண்டு உழவு இயந்திரங்களை நட்டாங்கண்டல் பொலிசார் கைப் பற்றியுள்ளனர்.

பறங்கியாற்றின உட்பகுதியில் உழவு இயந்திரங்களை இறக்கி மணல் ஏற்றிய குற்றச்சாட்டிலேயே இரு உழவு இயந்திரங்களும் கைப் பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உழவு இயந்திரங்கள் நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இதேவேளை அதன் சாரதிகள் இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்,

சாரதிகள் இருவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மாங்குளம் நீதவான் நீதிமன்றில் அடுத்தவாரம் நிறுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனம் ஈ–ட்ரைவ் டக்ஸி சேவை அறிமுகம்!




டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவட்) லிமிடட் நிறுவனம் பொதுப் போக்குவரத்துக்காக மாதிரி இலத்திரனியல் ஒட்டோக்களைக் கொண்ட ஈ-ட்ரைவ் டக்ஸி சேவையை நேற்று (வெள்ளிக்கிழமை) அறிமுகப்படுத்தியுள்ளது.

புகை வெளியேற்றம் அல்லாத மற்றும் எரிபொருள்களில் தங்கியிருப்பதைக் குறைப்பதற்கு உதவும் வகையில் சுற்றாடலுக்கு நட்பான வகையில், இந்த ஈ. ட்ரைவ் டக்ஸி வடிவமைக்கப்பட்டுள்ளது.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவட்) லிமிடட் நிறுவனம் அறிமுகப்படுத்தும் இந்த ஈ-ட்ரைவ் திட்டம் பயணிகளுக்கு செலவுச் சிக்கனமான போக்குவரத்து சாதனத்தை வழங்குவது மாத்திரமன்றி, இரைச்சல் குறைவான, சுமுகமான பயணத்தை பயணிகளுக்கு வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வாகனத்தைப் பயன்படுத்துவது மற்றும் பராமரிப்பதற்கு குறைந்தளவு செலவீனமே ஏற்படுவதால் பயணிகளுக்கும் இது நேரடியான நன்மையை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, ஒழுக்கமான மற்றும் தொழில்முறை டக்ஸி சாரதிகள் அணியை உருவாக்கும் நோக்கத்துடன், ஈ-ட்ரைவ் டக்ஸி சேவையின் சாரதிகள் இந்த வாகனத்தை எப்படி செலுத்துகின்றனர் என்பது மட்டுமல்லாது, வீதிகள் மற்றும் வீதி நடைமுறைகள் தொடர்பாக புத்தாக்கப் பயிற்சியையும் பெற்றுள்ளனர்.

ஈ-ட்ரைவ் டக்ஸி சேவையில் உள்ள சாரதிகளுக்கு சீருடை வழங்கப்பட்டிருப்பதுடன், ஏதாவது நிகழ்வுகள் அல்லது சாரதிகள் தொடர்பான பின்னூட்டங்களை வழங்குவதற்கான தொலைபேசி இலக்கங்களுடன் சாரதிகள் குறித்த விவரங்களும் வாடிக்கையாளர்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

இதற்கு மேலதிகமாக அனைத்து வாகனங்களும் நிறுவனத்தால் மையமாக கண்காணிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒட்டோ முதற்கட்டமாக கொழும்பு மற்றும் அதனை அண்டியுள்ள புறநகர்களில் மாத்திரம் இயக்கப்படும்.

வெள்ளை மற்றும் பச்சை நிறம் கலந்த தனித்துவமான நிறத்தால் இதனை இலகுவில் அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்பதுடன், திங்கள் முதல் சனிக்கிழமை ஆகிய நாள்களில் மு.ப. 7 மணி முதல் பி.ப. 7 மணிவரை இதன் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யோகோ டக்ஸி செயலி மூலமாகவும், 077 760 6077 என்ற பிரத்தியேக தொலைபேசி இலக்கம் மூலமாகவும் முன்பதிவு செய்து இவற்றின் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முன்னோடி திட்டத்தின் ஒரு பகுதியாக 20 பஜாஜ் ஒட்டோக்களை டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவட்) லிமிடட் நிறுவனம் இவ்வாறு மாற்றம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## கதிர்காமம் விபத்தில் 7 படையினர் காயம்

கதிர்காமம் கிரிவெஹர ரஜமகா விஹாரைக்கு அருகில் இராணுவத்துக்குச் சொந்தமான உழவு இயந்திரம் நேற்றுக் காலை விபத்துக்குள்ளானதில் ஏழு இராணுவத்தினர் காயமடைந்து கதிர்காமம் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் நால்வர் மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரும் இராணுவத்தின் சிங்க படைப் பிரிவைச் சேர்ந்தது என பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் கதிர்காமம் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்போது கடமை தவறிய காவலர் பணி நீக்கம்

2019 ஆம் ஆண்டு நடந்த உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகள் தொடர்பில் கடமை தவறிய குற்றச்சாட்டில் கட்டான பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய புலனாய்வு பிாவின் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவா பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தாக்குதல் தொடர்பில் தகவல் கிடைத்தும் அது குறித்து நடவடிக்கை எடுக்கத் தவறியிருந்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

பணி நீக்கம் செய்யப்பட்டவருக்கு எதிராக முதற்கட்ட விசாரணை நடத்தப்பட்டு, ஒழுக்காற்று மீறல்கள் தொடர்பாக 12 குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றப்பத்திரிம் அனுப்பப்பட்டுள்ளது.

## சட்டவிரோத மணல் அகழ்வு பூநகரி பகுதியில் அதிகரிப்பு





பூநகரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு அதிகரித்துள்ளதாகப் பொதுமக்கள் முறையிடுகின்றனர்.

பரமன்கிராய், வெட்டுக்காடு பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் பொலிஸாரின் துணையுடனேயே இந்த மண் அகழ்வு இடம் பெறுவதாகவும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நாளாந்தம் தொடர்ச்சியாக இரவு வேளைகளில் மண் அகழ்வு இடம் பெற்று வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர் இது தொடர்பாக பலமுறை சம்பந்தப்பட்ட

அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Pernner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நாடாளுமன்ற மேம்பாட்டுச் சர்வதேச நிபுணர் கெவின் டெவாக்ஷ் சபாநாயகருடன் சந்திப்பு







கனேடிய நாட்டின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் நாடாளுமன்றஅபிவிருத்திதொடர்பான சர்வதேச நிபுணருமான கெவின் டெவாக்ஷிற்கும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேகுணவர்தனவுக்கும் இடையிலான சந்திப்பு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. இந்த சந்திப்பில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின்இலங்கைக்கானவதிவிடப் பிரதிநிதி அசூசா குபோடாவும் கலந்துகொண்டார். (05)

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.டி.அபேரத்ன பிணையில் விடுவிப்பு

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சக்தியின் ஹொரணை பிரதான அமைப்பாளருமான பி. டி. அபேரத்ன பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் வியாழக்கிழமை ஹொரனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர் 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்குமாறு நீதிவான் சந்தன கலங்சூரிய உத்தரவிட்டார். மேலும், அவருக்கு வெளிநாட்டுப் பயணத்தடைவிதிக்கப்பட்டதுடன்,கடவுச்சீட்டைநீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் உத்தரவிடப்பட்டது. இதேவேளை, அவரது துப்பாக்கியை நீதிமன்ற பொறுப்பில் எடுத்து பாதுகாப்பு அமைச்சின் ஊடாக அதன் உரிமத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஹொரனை தொகுதி அமைப்பாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.டி. அபேரத்ன ஹொரனை, பொரலுகொடவிலுள்ள தனக்குச் சொந்தமான காணிக்குள் அனுமதியின்றி பிரவேசித்த சிலருடன் ஏற்பட்ட தகராறில் துப்பாக்கிச் சூடு நடத்தியமை தொடர்பில் புதன்கிழமை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். காணியை பராமரிப்பதற்காக குறித்த காணியில் தம்பதியொருவர் தங்கியுள்ளதுடன், வெளியாட்களை அழைத்து வர வேண்டாம்என அந்தத்தம்பதிக்கு அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், புதன்கிழமை குறித்த காணிக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சென்ற போது வெளியாள்கள் குழுவொன்று அங்கிருந்ததாகவும், அவருடன்தங்கியிருந்தவர்கள் தகராறு செய்தனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தனது துப்பாக்கியால் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும், துப்பாக்கிச் சூட்டில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஹொரண பொலிஸார் துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி மற்றும் மூன்று தோட்டாக்களுடன் அபேரத்னவை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரை ஹொரணை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய பின்னர் 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (05)

## சிறைச்சாலைகளில் கைதிகள் எண்ணிக்கை அளவுக்கதிகம்

சிறைச்சாலைகளில்கைதிகளின் எண்ணிக்கை 259 வீதத்தால் அதிகரித்துள்ளது. மேலும் சில சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை 300 முதல் 400 வீதம் வரையில் அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தலைமையில் அண்மையில்நடைபெற்ற அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவில் (கோபா) சிறைச்சாலைகள் திணைக்களத்தில் உள்ள பல பிரச்சினைகள் வெளிப்படுத்தப்பட்டன. சிறைச்சாலை கைதிகளின் எண்ணிக்கை 259 வீதத்தால் அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கை சில சிறைச்சாலைகளில் 300 முதல் 400 வீதம் வரை உயர்ந்துள்ளது.

இதன்படி சிறைச்சாலைகளில் 11,762 கைதிகளுக்கு மாத்திரமே போதுமான இடவசதிகள் காணப்படுகின்றன. ஆனால் தற்போது 26,791பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 17,502 பேர் விளக்கமறியலிலும், 10,470 பேர் போதைப்பொருள் தொடர்பிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட 9,289 பேரும், 3,569 பேர் போதைப்பொருள் தொடர்பிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 1, 309 பேர் அபராதம் செலுத்த முடியாமல் சிறையில் இருப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் திணைக்களத்தை ஸ்தாபிப்பது தொடர்பிலான தற்போதுள்ள சட்டமூலத்துக்கு பதிலாக சர்வதேச தரத்திற்கு அமைவாக புதிய சட்டமூலமொன்றை தயாரிக்குமாறு (கோபா) குழு பரிந்துரைத்த போதிலும் அந்த பணிகளில் தாமதம் ஏற்படுவது குறித்து அக்குழு அதிருப்தி வெளியிட்டுள்ளது. (05)

## 3 மில். டொலர் பெறுமதியான உதவி அமெரிக்காவிடமிருந்து

அமெரிக்காவைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் சுகாதார அபிவிருத்தி மற்றும் நலனோம்பு அமைப்பான ''அமெரிக்கெயார்ஸ்', 3 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசிய மருந்துப்பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

வொஷிங்டனில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்தின் கோரிக்கைக்கு அமைவாக வழங்கப்பட்டுள்ள இந்த உதவியில் பக்றீரியா தொற்றைக் குணப்படுத்துவதற்கு அவசியமான அமொக்ஸிலின், ஒவ்வாமை மற்றும் உயர் குருதியழுத்தம் ஆகியவற்றைக் குணப்படுத்துவதற்கான மருந்து என்பன உள்ளடங்கலாக உடனடித்தேவையென சுகாதார அமைச்சால் கோரப்பட்டிருந்த மருந்துகள் உள்ளடங்குகின்றன.

இந்நன்கொடை உதவி தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்காவுக்கான இலங்கைத்தூதுவர் மஹிந்த சமரசிங்க, 'அமெரிக்கெயார்ஸ் அமைப்பால் வழங்கப்பட்ட உதவிகளுக்கு நன்றி கூறுகின்றோம். இந்த மருந்துகள் இலங்கை மக்களின் சுகாதார நலனை மேம்படுத்துவதற்குப் பெரிதும் பங்களிப்புச்செய்யும் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்கெயார்ஸ் என்ற நலனோம்பு அமைப்பு இலங்கைக்கு நீண்டகாலமாக மருந்துப்பொருள்கள், மருத்துவ உபகரணங்கள், நிவாரணப்பொருள்கள் உள்ளிட்ட உதவிகளை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)




## இலங்கையில் அணுமின் நிலையம் அணுசக்தி நிறுவனம் ஆராய்கிறது

*இலங்கையில் அணு மின் நிலையத்தை அமைப்பதற்கான ரஷ்யாவின்திட்டங்களை சர்வதேச அணுசக்தி நிறுவனம் ஆய்வு செய்து வருகிறது.*

*இந்த நிலையில் இந்தத் திட்டம், நாட்டின் அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்டு தற்போது சர்வதேச அணுசக்தி நிறுவன நிபுணர்களால் ஆய்வு செய்யப்பட்டுவருவதாக ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் ஜனிதா லியனகே தெரிவித்துள்ளார்.*

*அதன்படி அணுமின் நிலையத்தை மிதக்க வைப்பதா அல்லது நிலத்தில்நிர்மாணிப்பதா? என்பது பற்றிய விவாதம் தற்போது இடம்பெற்று வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.*

*இதேவேளை அணுமின்நிலையங்களில் பணிபுரியும் நிபுணர்களுக்கான பயிற்சிகளை ரஷ்யாவின், ரஷ்ய அரச அணுசக்தி கூட்டுத்தாபனம் வழங்கவுள்ளது.*

*இந்த நிலையில் குறித்த அணு மின்சார நிலையத்தின் உற்பத்தி நிலையத்தின் திறன் 300 மெகாவோட்டாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)*

# சிறுவர் தொழிலாளர் எண்ணிக்கை அதிகரிப்பு: சர்வதேச தொழிலாளர்கள் அமைப்பு தகவல்!

கடந்த இருபது வருடங்களில் முதன்முறையாக சிறுவர் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் 160 மில்லியன் சிறுவர்கள், தொழிலாளர்களாக இருக்கின்றனர் என சர்வதேச தொழிலாளர் அமைப்பு சுட்டிக்காட்டியது. குறிப்பாக 80 மில்லியன் சிறார்கள் உடல் மற்றும் உள ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அபாயகரமான தொழில்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அந்த அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது. இந்நிலைமை அரிதானதாகும் என்றும் முறையான பெற்றோர்கள் இல்லாத பட்சத்தில் இவ்வாறான நிகழ்வுகள் பெரிதும் நிகழ்கின்றன என்றும் குறித்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. வறுமையின் பொருட்டு சிறார்கள் வேலைக்குச் செல்வதைத் தடுப்பதற்கான வழி வயது வந்தவர்கள் தொழில்புரிவது மட்டுமே என்று தெரிவித்துள்ள சர்வதேச தொழிலாளர் அமைப்பு, இதன் ஊடாக சிறார்கள் பாடசாலைக்கு செல்லும் வீதத்தையும் அதிகரிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளது. (05)

## பொலிஸ்காவலின் கீழான உயிரிழப்புக்கள் சட்டத்தரணிகள் சங்கம் தீவிர கரிசனை!

அண்மைய காலங்களில் நாட்டின் பல்வேறு பாகங்களில் பதிவாகிவரும் பொலிஸ்காவலின் கீழான உயிரிழப்புச் சம்பவங்கள் மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் விசனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

அதுமாத்திரமன்றி தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கின்ற, தமது பணியை உரியவாறு நிறைவேற்றுவதற்குத் தவறுகின்ற பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக வலுவான சட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும், கடுமையான தண்டனைகளை வழங்குமாறும் அந்தச் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

சட்டத்தின் ஆட்சியின்கீழ் இயங்கும் சமூகமொன்றில் நிகழக்கூடிய குற்றச்செயல்களில் மிகமோசமானதாகக் கருதப்படக்கூடிய பொலிஸ்காவலின் கீழான உயிரிழப்புச்சம்பவங்கள் மீளநிகழாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டல்களைத் தயாரிக்குமாறும், மக்கள் பாதுகாப்பை முன்னிறுத்தி குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிக்கையொன்றின் ஊடாக சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையின் சட்ட முறைமை விசாரணை, வழக்குத்தொடுப்பு, தண்டனை வழங்கல் ஆகியவற்றை முன்னெடுப்பதற்கு உரியவாறான அதிகாரங்களை வழங்கியிருக்கின்றது. அதுவே ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியின் அடிப்படை என்பதுடன் அந்தச் செயன்முறைமீதான நம்பகத்தன்மையும் வெளிப்படைத்தன்மையும் பாதுகாக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகும்.

அரசமைப்பின் பிரகாரம் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிக்குக்கூட உயிர்வாழ்வதற்கான உரிமை உண்டு. பொலிஸ்காவலின் கீழான சந்தேகநபரின் உயிரிழப்பு அல்லது சட்டவிரோத படுகொலை என்பன உயிர்வாழ்வதற்கான உரிமையை மீறுகின்றது என்ற நிலைப்பாட்டை இலங்கையின் நீதிமன்றங்கள் தொடர்ச்சியாகப் பேணியிருக்கின்றன. என்று சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் இலங்கையில் பொலிஸ்காவலின்கீழ் இடம்பெறும் உயிரிழப்புக்கள் மற்றும் சித்திரவதைகள் என்பன கரிசனைக்குரிய மட்டத்தில் தொடர்ந்து இடம்பெற்றுவருவதாகத் தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் சங்கம், 'மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மாத்திரம் அரசின் கடமையல்ல. மாறாக பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான இழப்பீட்டை வழங்குவதும், சட்டத்தைமீறுபவர்களைத் தண்டிப்பதும் அரசின் கடமையாகும்' என்று வலியுறுத்தியுள்ளது. (05)

## கொரோனா, டெங்கிலிருந்து தப்பிய சிறுமி ரிட்ஜ்வே வைத்தியசாலைக்கு நிதி சேகரிப்பு

### நன்றிக் கடனைத் தீர்க்கும் முகமாக

மரணத்தின் பிடியிலிருந்து தப்பிய பத்து வயது சிறுமியொருவர் கொழும்பு ரிஜ்வே வைத்தியாசாலைக்காக நிதிசேகரிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்.

எலிசா சாமுவேல் என்ற பத்து வயது சிறுமி தனது தாயாரான வைத்தியர் மனுூரி சமரக்கோனின் உதவியுடன் இந்த முயற்சியை ஆரம்பித்துள்ளார்.

லேடிரிட்ஜ்வே வைத்தியாசாலையின் தீவிரகிகிச்சை பிரிவிற்காக நிதி திரட்டுவதற்கான நிகழ்வு 17- 18 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

எலிசா ஒரேநேரத்தில் கொவிட் மற்றும் டெங்குவால் பாதிக்கப்பட்டார் எனத் தெரிவித்துள்ள தாயார் லேடிரிட்ஜ்வே வைத்தியசாலையின் மருத்துவர்களும் தாதிமார்களும் கடும்போராட்டத்தின் பின்னர் அவரது உயிரை காப்பாற்றினர் எனத் தெரிவித்துள்ளார்.

இன்று எலிசாவிற்கு பத்துவயது அவர் ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் இருக்கின்றார், இதற்கு லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் மருத்துவர்களும் தாதிமார்களுமே காரணம் எனத் தெரிவித்துள்ள தாயார், எலிசா மரணத்தின் பிடியில் சிக்குண்டிருந்த தருணத்தில் மருத்துவர்கள் அற்புதமான விதத்தில் செயற்பட்டு அவரை மீட்டார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாக தன்னை காப்பாற்றிய வைத்தியசாலைக்கு மகள் தன்னால் முடிந்த விதத்தில் ஏதாவது செய்ய தீர்மானித்துள்ளார் எனவும் வைத்தியரான தாயார் தெரிவித்துள்ளார்.

லயனல் வென்ட் அரங்கில் காட்சிக்கு வைக்கப்படும் ஓவியங்கள் ஏலத்தில் விடப்படும் என குறிப்பிட்டுள்ள தாயார், இதன் மூலம் கிடைக்கும் பணத்தை மருத்துவமனையின் தீவிரகிசிச்சை பிரிவிற்கு கட்டில்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (05)

## அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ள முடியவில்லை

### பந்துல குணவர்த்தன வருத்தம்



நாடு பெற்றுக் கொண்டுள்ள கடனை மீள செலுத்த முடியாத நிலைமை காணப்படுவதால், பல அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடனை எவ்வாறு மீளச்செலுத்துவது என்பது தொடர்பாகவே அரசாங்கம் தீர்க்கமாக ஆராய்ந்து வருகிறது. கடனை திருப்பிச் செலுத்தாத காரணத்தால் எம்மால், அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குக்கூட கடனைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் என்ற வகையில், வீதிகளுக்கு என்னால் தார் போட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பாலமொன்று உடைந்து விழுந்தால் கூட, அதனை நிர்மாணிக்க முடியாமல் உள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியோ, உலகவங்கியோ ஒருரூபாவைக்கூட கடனாகத் தரமாட்டார்கள். இதுதான் இப்போதுள்ள பெரிய பிரச்சினை. - என்றார். (05)

## மலேரியா அச்சுறுத்தல் தொடர்பாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஆறு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் மீண்டும் மலேரியா அச்சுறுத்தல் தொடர்பாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கமைய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நுளம்புகளின் தாக்கம் இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அம்பாறை மாவட்டத்திலுள்ள, அக்கரைப்பற்று, திருக்கோவில், ஆலையடிவேம்பு மற்றும் அட்டாளைச்சேனை மற்றும் யாழ்ப்பாணத்தின் பருத்தித்துறை மருத்துவ அதிகாரி பிரிவிலேயே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2016 டிசெம்பர் முதல் 2017 ஏப்ரல் வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் 2016 ஆம் ஆண்டு மன்னாரிலும் அதன் பின்னர் வடமாகாணத்தின் யாழ், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் முதன்முதலில் மலேரியாவை பரப்பும் நுளம்புகள் கண்டறியப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)



## சிறுமியை மிரட்டிய இராணுவவீரர் கைது!

17 வயதான பாடசாலை மாணவியொருவரின் நிர்வாண புகைப்படங்களை சமூகஊடகங்களில் வெளியிடுவதாக மிரட்டிய இராணுவ வீரரை கட்டுகஸ்தோட்ட பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த பாடசாலை மாணவியின் முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மின்னேரிய இராணுவ முகாமில் கடமையாற்றும் 23 வயதான இராணுவ வீரரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் அனுராதபுரத்தைச்சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (05)

## வத்தளையில் இளைஞர் மாயம்



வத்தளைப் பிரதேசத்தில் 29 வயதுடைய இளைஞர் ஒருவர் காணாமல்போயுள்ளார்.

இ.பி.கசுன் சம்பத் என்ற நபரே காணாமல்போயுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த நபர் வத்தளைப் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள நிறுவனமொன்றில் காவலாளியாகப் பணியாற்றி வந்துள்ளார்.

இவ்வாறு பணிபுரிந்து கொண்டிருந்த அவர் கடந்த 12ஆம் திகதி நண்பகல் 12.30 மணிக்குப் பின்னர் திடீரென மாயமானார் என்று வத்தளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த நபரை யாராவது கண்டால் உடனடியாகப் பொலிஸ் நிலையத்துக்கு அல்லது 076 668 9959/ 077 219 0251 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## கோதுமை மா, பருப்பு விலைகள் குறைப்பு!

லங்கா சதொச நிறுவனம் வியாழக்கிழமை முதல் மேலும் 3 அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையைக் குறைத்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டு, 195 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. ஒரு கிலோகிராம் சிவப்பு பருப்பின் விலை 4 ரூபாவால் குறைக்கப்பட்டு 295 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு கிலோகிராம் கடலை பருப்பின் விலை 13 ரூபாவால் குறைக்கப்பட்டு 275 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்று லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

## கணவனைப் பிரிந்து வாழ்ந்து வந்த பெண்ணொருவர் சுட்டுக் கொலை!

திருமணமாகிக் கணவனைப் பிரிந்து வாழ்ந்தவந்த பெண் ஒருவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பொலனறுவை மாவட்டம், மெதிரிகிரிய பிரதேசத்தில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த துப்பாக்கிச்சூட்டில் மிரிசேன மீனவ கிராமத்தில் வசிக்கும் 36 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண், தாய் வீட்டுக்குச் சென்றுவிட்டு தனது வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, அவரது தாய் வீட்டின் முன் மறைந்திருந்த நபர் ஒருவர் குறித்த பெண்ணை நோக்கித் துப்பாக்கியால் சுட்டுள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த பெண் மெதிரிகிரிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

பிரிந்து சென்ற கணவருடன் ஏற்பட்ட தகராறு காரணமாகத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

துப்பாக்கிச்சூடு நடத்திய சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளதுடன், அவரை கைது செய்வதற்கான விசாரணைகளை மெதிரிகிரிய பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

## இறைவனைத் தரிசிப்பதற்கு சென்றவர் இறையடி சேர்வு!

கதிர்காமத்தில் நடைபெறும் எசல திருவிழாவில் கலந்துகொள்வதற்காக யால சரணாலயத்தின் ஊடாக பாத யாத்திரை மேற்கொண்ட யாத்திரீகர்கள் குழுவைச் சேர்ந்த பெண் ஒருவரை காட்டுயானை தாக்கியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் திருகோணமலை மாதவிபுரத்தைச் சேர்ந்த 63 வயதான நீலகம்மா இராசதுரை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த யாத்திரீகர்கள் குழுவில் அவரது கணவர் மற்றும் உறவினர்களும் இருந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## அஸீஸ் காங்கிரஸின் தலைவர் காலமானார்



மலையகத்தமிழர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த சிரேஷ்ட அரசியல் தொழிற்சங்கவாதியான 'மனிதருள் மாணிக்கம்' எனப் போற்றப்படும் அமரர் அப்துல் அஸீஸின் மகனான அஷ்ரப் அஸீஸ் இன்று அதிகாலை காலமானார்.

அஷ்ரப் அஸீஸும் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்காகத் தொடர்ச்சியாகக் குரல் எழுப்பி வந்தவர். அஸீஸ் காங்கிரஸ் எனும் தொழிற்சங்கத்தை நிறுவி, அதன் ஊடாக அரசியல், தொழிற்சங்கப் பணிகளை முன்னெடுத்தவர்.

உடல்நலக்குறைவால் சில வருடங்களாக அவர் செயற்பாட்டு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

கொழும்பு, பம்பலப்பிட்டியில் உள்ள வீட்டில் தங்கியிருந்த நிலையிலேயே இன்று அதிகாலை காலமானார்.

அவரின் ஜனாஸா கொழும்பு, தெமட்டகொடை, குப்பியாவத்த முஸ்லிம் மையவாடியில் இன்று முற்பகல் 11 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

## மருந்துகளின் விலை குறைப்பு தொடர்பில்; சுகாதார அமைச்சு வர்த்தமானி வெளியீடு

எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் 60 வீதமான மருந்துகளுடைய விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. மேலும் குறித்த 60 மருந்துகளுக்கான அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் கையொப்பத்துடன் வியாழக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைவாக 60 வகையான மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலை 16 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன என வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வியாழக்கிழமை முதல் மருந்துகளின் விலைகளை 16 வீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் 3 மாதங்களுக்கு ஒருமுறை மருந்துகளின் விலைகளை மீளாய்வு செய்து அதனைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

அதற்கமைவாக, எதிர்வரும் இரண்டு மாதங்களில் மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய விலை குறைப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளால் சாதகமான நிலையை அடைய முடியும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் வாக்குகளுக்காகவே ஜனாதிபதி மரபுரிமைகளை ஆயுதமாக்குகின்றார்

## மாநாயக்கர்கள் கவனத்துக்கு கொண்டுவரப்போவதாக பிக்குகள் எச்சரிக்கை

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள் மரபுரிமைகளை ஆயுதமாக பயன்படுத்திக் கொள்ள முனைவதாக குற்றஞ்சாட்டும் பிக்குகள், இந்த விடயத்தை மகாநாயக்க தேரரின் கவனத்திற்குகொண்டுசெல்வோம்என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில், குருந்தூர் மலை விகாரையின் விகாராதிபதி கல்கமுவே சத்தபோதி தேரர் தெரிவித்ததாவது:

குருந்தூர்மலைவிகாரைமற்றும்காணி ஆகிய விடயங்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதிக்கும், தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கும் இடையிலான பேச்சு தற்போது பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

இதன் பெறுபேறாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பதவி வகித்த அனுர மனதுங்க பதவி விலகியுள்ளார்.

குருந்தூர்மலைக்குசொந்தமானகாணி அதிகம் அநுராதபுரம் மகா விகாரையை காட்டிலுல் குருந்தூர் விகாரைக்கு நிலப் பரப்பு அதிகம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள் திணைக்கள பணிப்பாளரை நோக்கி நேரடியாக குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மகா விகாரையின் நிலப்பரப்பு 100 ஏக்கர் கூட இல்லை அவ்வாறு இருக்கையில் குறுந்தூர் விகாரையின் காணி எவ்வாறு அதிகரிக்க கூடும் என்று ஜனாதிபதி கேள்வியெழுப்பியுள்ளார். மகா விகாரை புத்தசாசனத்தின் ஆரம்பத்தை அடிப்படையாக கொண்டுள்ளதால் அதனை மகா விகாரை என்று குறிப்பிடுகிறோம்.

மகா விகாரைக்கு 2000 ஏக்கர் நிலப் பரப்பு சொந்தமாக உள்ளது. அபயகிரி விகாரை,இசுறுமுனிவிகாரைமற்றும்ஆகிய புனித விகாரைகளை உள்ளடக்கியுள்ளது.

மிஹிந்தலை விகாரை 500ஏக்கர் நிலப்பரப்பை கொண்டுள்ளது. இந்த காரணிகளை அடிப்படையாக கொண்டே மகா விகாரையின் நிலப்பரப்பு அதிகம் என்று குறிப்பிடப்படுகிறது. இதனை ஜனாதிபதி,தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் விளங்கிக்கொள்ள வேண்டும். குருந்தூர் மலையில் தமிழர்களுக்கு சொந்தமான காணி காணப்படுமாயின் அவற்றை விடுவிக்குமாறு ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். பல ஆண்டு காலமாக தமிழர்கள் விவசாயம் செய்த காணிகளை தொல்பொருள் திணைக்களம் கையகப்படுத்தியுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தொடர்ந்து குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

முல்லைத்தீவு குருந்தூர் விகாரைக்கு சொந்தமானகாணிஅளவிடப்பட்டு1933ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. 78 ஏக்கர் நிலப்பரப்பு வர்த்தமானி ஊடாக குருந்தூர் விகாரைக்கு உறுதிப்படுத்தப்பட்டது.

குருந்தூர் மலையில் பௌத்த தொல்பொருள் சின்னங்கள் காணப்படுவதால் அதனை ஆய்வு செய்வதற்காகவே மேலதிகமாக 223ஏக்கர் காணி தொல்பொருள் பாதுகாப்பு பகுதியாக வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டது.

தமிழர்களின் காணிகளை தொல்பொருள் திணைக்களத்தால் கையகப்படுத்தப்படவில்லை. வன அழிப்பு ஊடாக குருந்தூர் மலைக்கு சொந்தமான காணிகளே அழிக்கப்பட்டுள்ளன.

தமிழ் பிரிவினைவாதிகளின் கருத்துகளில் கவனம் செலுத்தாமல் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தவேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம் - என்றார்.

இதேவேளை, மக்கள் பேரவை அமைப்பின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள் மரபுரிமைகளைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நோக்கங்களுக்கு வலு சேர்க்கும் வகையில் ஜனாதிபதி செயற்படக் கூடாது. குருந்தூர் விகாரை மற்றும் குருந்தூர் மலையில் உள்ள பௌத்த மரபுரிமைகளை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் பெரும் விளைவுகள் ஏற்படும் - என்றார்.

தேசிய வளங்களை பாதுகாக்கும் அமைப்பின் செயலாளர் கஸ்ஸப்ப தேரர், தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுர மனதுங்க பதவி விலகியமை தவறானது. ஜனாதிபதியின் சட்டவிரோத கட்டளைக்கு எதிராக போராடியிருக்க வேண்டும் - என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளராகவும், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கத்தை தொல்பொருள் மற்றும் மரபுரிமைகள் அமைச்சராக நியமிக்கவேண்டும். இதன் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த மரபுரிமைகள் பாதுகாக்கப்படும்.

குருந்தூர் மலைக்கு சொந்தமான காணிகளை அரசியல் நோக்கத்துகாக பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்விடயம் தொடர்பில் வெகுவிரைவில் மகாநாயக்க தேரர்களை நாடுவோம் - என்றார்.

# மந்த புத்திக்காரர்களின் கருத்துகளுக்கு பதிலளிப்பதில்லை என ஐ.தே.க. முடிவு

## இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த குறித்து பாலித பண்டார கருத்து

எமதுகட்சியானதுமந்தபுத்தியுடையவர்களின் கருத்துக்களுக்கு பதிலளிப்பதில்லை என்று கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது. ஆகவே அதனைப் பின்பற்றுவதற்கே நாம் முயற்சிக்கின்றோம். சில இடங்களில் மூளை வளர்ச்சி குன்றியவர்கள், பைத்தியக்காரர்கள் இருக்க முடியும். அவர்களுக்கு பதிலளித்துக்கொண்டு இருக்க முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலிதரங்கேபண்டார.புத்தளத்தில்உள்ள ஐக்கிய தேசியக் கட்;சியின் அலுவலகத்திற் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும் தரப்பின் நாடாளுமன்றக் குழுவேஜனாதிபதியைச்சந்திப்பதற்கான கூட்டத்தினைக் கூட்டவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தது. அதற்கு அமைவாகவே ஜனாதிபதி கூட்டத்தினை கூட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

அந்தக்கூட்டத்தில்40பேர்வரையில் பங்கேற்க இருந்தனர். இருப்பினும் வெவ்வேறு காரணங்களால் 30 பேர் வரையிலானோரே பங்கேற்றிருந்தனர். இந்த விடயம் மறைக்கப்பட்டு தவறான புனைகதைகளே பரப்புரை செய்யப்பட்டுள்ளது - என்றார்.

இதேவேளை, இராஜாங்க அமைச்சர் சனத் நிரந்த, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ககூட்டத்தினைநடத்தியமை தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக வினவப்பட்டபோது,

எமதுகட்சியானதுமந்தபுத்தியுடையவர்களின் கருத்துக்களுக்கு பதிலளிப்பதில்லை என்று கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது. ஆகவே அதனைப் பின்பற்றுவதற்கே நாம் முயற்சிக்கின்றோம். சில இடங்களில் மூளை வளர்ச்சி குன்றியவர்கள், பைத்தியக்காரர்கள் இருக்க முடியும். அவர்களுக்கு பதிலளித்துக்கொண்டு இருக்க முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்காக எமது அரசியல் பயணத்தினை தொடருமாறு கோரியுள்ளார். ஆகவே அவருடைய தொலைநோக்கான சிந்தனையை குழப்புவதற்கு முயல்பவர்கள் இந்த நாட்டின் எதிர்காலம் பற்றி பொறுப்புக்கூறுவதற்கான வகிபாகத்தினை பெற்றுக்கொள்ள நேரிடும் - என்றார்.

# டிஜிட்டல் மயமாக்கல் மூலம் வரிசைகளை ஒழிக்க முடிந்தது

## அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு

கடவுச் சீட்டுப் பெறுவதற்கான நீண்ட வரிசைகளை டிஜிட்டல்மயமாக்கல் மூலம் இல்லாமலாக்க முடிந்துள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், தெரிவித்தார்.

ஹோமாகம பிரதேச செயலக அலுவலக வளாகத்தில் வியாழக்கிழமை இணைய முறைமை ஊடாக கடவுச்சீட்டுக்களை விநியோகிக்கும் வேலைத்திட்டத்தினை தொடக்கிவைக்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி இந்த அமைச்சை என்னிடம் ஒப்படைத்தபோது நான்கு நிறுவனங்களை ஒப்படைத்தார். குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், அபாயகர ஔடதங்கள் அதிகாரசபை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களைப் பதிவு செய்யும் அதிகாரசபை ஆகிய நான்கு நிறுவனங்களாகும்.

அந்த நிறுவனங்களை வழங்கும் போது, பொதுமக்களுக்கு சிறப்பான சேவையை வழங்குவதை முறைமைப்படுத்துமாறு ஜனாதிபதி எனக்கு பணிப்புரை வழங்கினார்.

ஒரு சில மாதங்களுக்கு முன்பு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு முன்பாக நீண்ட வரிசைகள் இருந்தன. டிஜிட்டல்மயமாக்கல்அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், ஒரு மாதத்திற்கு முன்பே குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் இருந்த நீண்ட வரிசைகளை இல்லாமலாக்க எம்மால் முடிந்தது,

தற்போது இணைய வழியின் மூலம் கடவுச்சீட்டுகளை வழங்கத் தொடங்கியுள்ளோம். இந்த இணைய வழியின் மூலம் கடவுச்சீட்டுகளை மூன்று நாட்களில் பெறுபவர்களிடம் 15,000 ரூபாயும், 14 நாட்களில் பெறுபவர்களிடம் ஐந்தாயிரம் ரூபாயும் அறவிடப்படும்.

மேலும், எதிர்காலத்தில் ஒரே கட்டடத்தில், பிறப்பு முதல் இறப்பு வரை தேவையான ஆவணங்களை மக்கள் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் ஏற்படும் - என்றார்.

# தியத்தலாவ – பண்டாரவளையில் விபத்து; 5 மாணவர்கள் உட்பட அறுவர் காயம்!

தியத்தலாவ-பண்டாரவளைபிரதான வீதியின் கஹகொல்ல பிரதேசத்தில் பாடசாலை பஸ் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் பாடசாலை மாணவர்கள் ஐவரும் சாரதியும் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 6.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், காயமடைந்த பாடசாலை மாணவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(05)

# மேன்முறையீடு செய்யும் வாய்ப்பு சமுர்த்திப் பயனாளிகளுக்கு கிட்டும்

## சாகல ரத்நாயக்க உறுதியளிப்பு

சமுர்த்தி மானியங்களை இழந்த பயனாளிகளுக்கு மேன்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுமென ஜனாதிபதி செயலகத்தின் பணிக்குழாம் பிரதானியும், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நலன்புரி கொடுப்பனவுகளை நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவதற்கான நடைமுறை அறிமுகப்படுத்தப்படும்

பயனாளிகளை எப்போதும் ஏழைகளாக வைத்திருக்காமல், அவர்களுக்கு பயன் கிடைக்கும்வகையிலானதிட்டத்தைதயாரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

புதிய நலன்புரி திட்டம் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளது. ஆகவே பொருளாதார நெருக்கடியால் நிர்கதியாகியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தினை மீண்டெழச் செய்யும் நம்பிக்கை எமக்குள்ளது என்றார்.

# 7 பெண்கள் உட்பட 8 பேர் கல்கிசைப் பகுதியில் கைது!

கல்கிசையில் பகுதில் ஸ்பா என்ற போர்வையில் விபச்சார விடுதி ஒன்றை நடத்தி வந்த குற்றச்சாட்டின் பேரில் ஏழு பெண்கள் உட்பட 8 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலின் பேரிலேயே இந்தச் சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளதாகவும், அவர்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) கல்கிசை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 19 தொடக்கம் 29 வயதுடையவர்கள் எனவும், களுத்துறை, இடல்கசின்ன, பன்னிபிட்டிய, வாதுவ, வத்தளை மற்றும் ஹல்மில்லாவ ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# 1500 கோடி ரூபா சிகரெட் அழிப்பு

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய தகவல்

1500 கோடி ரூபா பெறுமதியான 20 கோடி சட்டவிரோதமான சிகரெட்டுகள் அழிக்கப்பட்டுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கெரவலப்பிட்டியவில் கடந்த 2021 ஆம் ஆண்டு சுங்கத் திணைக்களத்தால் கைப்பற்றப்பட்ட குறித்த தொகை சிகரெட்டுக்களே இவ்வாறு அழிக்கப்பட்டன எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதனால் அரசாங்கத்திற்கு 1300 கோடி ரூபா சேமிக்கப்பட்டதாகவும் சுங்கத் திணைக்களத்தினருக்கு தனது நன்றியைத் தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். குறித்த சிகரெட்டுகளை விற்க முடியாததோடு இவற்றின் தரத்துக்கு எந்தப் பொறுப்பும் கூறமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# புலமைப்பரிசில் பரீட்சை ஒக்டோபர் 15 ஆம் திகதி

2023ஆம்ஆண்டுக்கானதரம்5புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் 15 ஆம் திகதி நடைபெறும். இந்தத் தகவலை பரீட் சைகள் திணைக்களம் இன்று அறிவித்துள்ளது. இன்று முதல் ஜூலை 06 ஆம் திகதி வரை பரீட்சைக்கான விண் ணப் பங்கள் பாடசாலைகளில் இருந்து கோரப்படும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# முகப் பூச்சுக்கள் தொடர்பில் தோல் மருத்துவர் எச்சரிக்கை

சருமத்தை வெண்மையாக்கும் முகப் பூச்சுக்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு தோல் மருத்துவர் இந்திரா கஹவிட்ட எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்துதெரிவிக்கையில்,சருமத்தைவெண்மையாக்கும்பொருள்கள் நூற்றுக்கணக்கானவை பல்வேறுஇணையதளங்களில்கிடைக்கின்றன.

அவ்வாறான பொருள்கள் மற்றும் தயாரிப்புகள் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளனவா போன்ற விடயங்களை ஆராயுமாறு வலியுறுத்தினார். மேலும் சருமத்தை அழகாக மாற் றும் எந்தவொரு பொருளையும் தாம் பரிந்துரைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் எவராவது, தோலில் ஏதேனும் மாற்றங்களைச் செய்ய விரும்பினால், அது படிப்படியாகவும் முறையாகவும் செய்யப்பட வேண்டும் என தோல் மருத்துவர் இந்திரா கஹவிட்ட குறிப்பிட்டுள்ளார். (05)

# திடீரெனத் தீப்பற்றிய வாகனம்: விசாரணைகள் முன்னெடுப்பு

மன்னார், முருங்கன் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட இசைமாலைத்தாழ்வு பகுதியில் வாகனமொன்று தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி இசைமாலைத்தாழ்வு பகுதியில் பொருள்களுடன் மன்னார் நோக்கி பயணித்த சிறிய பட்டா ரக வாகனத்தில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

வாகனத்தின் இயந்திரப்பகுதி திடீரெனத் தீப்பற்றிய நிலையில் வாகன சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோர் வாகனத்தில் இருந்து வெளியேறி வாகனத்தில் இருந்த பொருள்களையும் அகற்றி உள்ளனர்.

சற்று நேரத்தில் வாகனம் முழுவதும் தீ பரவல் ஏற்பட்டும் முழுமையாகவாகனம்எரிந்துநாசமாகியுள்ளதுசாரதியும்உதவியாளரும் எந்தவித காயங்களும் இன்றி உயிர் தப்பியுள்ளனர்.

குறித்தசம்பவம்தொடர்பிலானமேலதிகவிசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM
FAAST-F2T
80-85 KM
FREEDOM
70-75 KM
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2
3
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் நடந்தது இனவழிப்பே உண்மையை ஏற்றுக்கொள்ளுங்கள்

## பிரித்தானிய எம்.பிக்கள் தமது ஆட்சியாளர்களிடம் வலியுறுத்து

இலங்கையில்தமிழர்களுக்குஎதிராகஇனவழிப்பு இடம்பெற்றது என்ற உண்மையை பிரித்தானிய ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், போர்க்குற்றவாளிகளுக்கு எதிராகத் தடைகளை விதிக்கவேண்டும் என்றும் அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையில் தமிழர் தாயகப்பகுதிகளில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புதொடர்பானவிசேடமாநாடொன்று பிரித்தானிய நாடாளுமன்றத்தின் பிரத்தியேக கூடமொன்றில் நடைபெற்றது.

பிரித்தானியாவைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் தமிழ்த் தேசிய அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் இணைந்து கூட்டாக ஏற்பாடுசெய்திருந்த இம்மாநாட்டில் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தரணி பற்றிக் லூயிஸ், 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள், சட்டத்தரணியும் சிவில் சமூக செயற்பாட்டாளருமான வீ.எஸ்.எஸ்.தனஞ்சயன் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளரும் இனப்படுகொலைக்கு எதிரான அமைப்பின் பணிப்பாளருமான ஜனனி ஆகியோர் விசேட உரையாற்றினர்.

அதேவேளை பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களான கரெத் தோமஸ், சாம் டெரி, சாரா ஜோன்ஸ், எட் டேவி, விரேந்திர ர்மா, ஜோன் மெக்டொனால்ட் ஆகியோர் உள்ளடங்கலாக அந்நாட்டு அரசியல்வாதிகளும், புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களும், தமிழ் இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுமெனப் பல்வேறு தரப்பினர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

அதன்படி இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய தவத்திரு வேலன் சுவாமிகள், சட்டத்தரணி தனஞ்சயன் மற்றும் செயற்பாட்டாளர் ஜனனி ஆகியோர் தமிழர் தாயகத்தில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவரும் இனவழிப்பு தொடர்பாகவும், தமிழர்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பின் 4 படிமுறைகள் தொடர்பிலும், அதற்குரிய தீர்வை சர்வதேச மட்டத்தில் அணுகுவதற்கான வாய்ப்பு தொடர்பாகவும் சுட்டிக்காட்டினர்.

அதுமாத்திரமன்றி இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகஇனப்படுகொலைஇடம்பெற்றதுஎன்றஉண்மையைபிரித்தானியஅரசாங்கம்ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியம் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

மேலும் இம்மாநாட்டில் உரையாற்றிய பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் மற்றும் இனப்படுகொலை ஆகியவற்றின் விளைவாகப் பாதிக்கப்பட்டதரப்பினருடனானதமதுஒருமைப்பாட்டை வெளிப்படுத்தியதுடன் தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை பிரித்தானிய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினர்.

அதுமாத்திரமன்றி போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக பிரித்தானிய அரசாங்கம் தடைகளை விதிக்கவேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட தரப்பினர் தொடர்பில் நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (05)

---

# அமைச்சர் அலி சப்ரி, சாகல ரத்நாயக்க ஆகியோருடன் ரோய் சமாதானம் சந்திப்பு



வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரை கனடிய அரசியல், சமூகச்செயற்பாட்டாளரான ரோய் சமாதானம் சந்தித்து உரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் புலம்பெயர் தமிழர்கள் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடினேன். குறிப்பாக, இலங்கையில் நிரந்தரமான சமாதான நிலைமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதோடு தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் கூடிய கரிசனைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரினேன்.

இதேநேரம், டென்மார்க்கில் வாழ்கின்ற 2 ஆயிரம் பேர் வரையிலான புலம்பெயர் தமிழர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்குத் தடையாக உள்ள டென்மார்க் அரசாங்கத்தால் வழங்கப்படும் அகதிகளுக்கான பயண ஆவணம் அல்லது கடவுச்சீட்டு ஆகியவற்றுக்கு இலங்கை அரசாங்கம் விதித்துள்ள தடைகளை நீக்க வேண்டும் என்று கோரினேன். குறித்த டென்மார்க் பிரஜைகள் தமது தாய்நாட்டைப் பார்ப்பதற்காக இலங்கைக்கு வருகை தருவதற்குத் தயாராக உள்ளனர். அத்துடன், முதலீடுகளைச் செய்வதற்கும் முன்வந்துள்ளனர்.

ஆகவே, அவற்றின் ஊடாக இலங்கைக்கு அந்நிய செலவாணி வருமானம் கிடைப்பதற்கு சாத்தியமான நிலைமைகள் உள்ளன.

ஆகவே, அவர்கள் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்குரிய தடைகளை நீக்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் கோரினேன். அக்கோரிக்கையை சாதகமாக பரிசீலிப்பதாக அமைச்சர் அலி சப்ரி மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஆகியோர் தெரிவித்துள்ளனர். - என்றார். (05)

---

# மக்களின் நலன்சார் சிந்தனையோடு அதிகாரிகள் செயற்படுதல் வேண்டும்!

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



அதிகாரிகள் மக்களின் நலன்கள் சார்ந்த சமூகச் சிந்தனையோடு செயற்பட வேண்டும் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பாக இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற சந்தர்ப்பங்களிலும் அவற்றுக்கான பயனாளர்களை தெரிவு செய்கின்றபோதும், எமது மக்களின் நலன்கள் சார்ந்த சமூகச் சிந்தனையோடு அதிகாரிகள் செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளப்படுத்தி, விரிவாக ஆராய்ந்து தீர்வுகாணும் நோக்கில் இடம்பெற்ற பிரதேசஒருங்கிணைப்புக் குழுகூட்டத்தில்போக்குவரத்து, விவசாயம், கால்நடை, குடிநீர் விநியோகம், கடற்றொழில் உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டன.


மேலும், வீதி அபிவிருத்தி அதிகார சபையால் முன்னெடுக்கப்படுகின்ற காரைநகர் - ஊர்காவற்றுறைஇடையிலானகடல் பாதை பழுதடைந்து இருப்பதால், அதனை திருத்தி சேவையில் ஈடுபடுத்தும் வரையில், தனியார் படகுகளை வாடகைக்கு அமர்த்தி பொது மக்களுக்கான போக்குவரத்து சேவையை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தி இருந்தார்.

இதேபோன்று, தீவகங்களுக்கு இடையிலான போக்குவரத்து கட்டணங்களைமீளாய்வு செய்தல், குடிநீர் விநியோகத்தை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட பல விடயங்களும் குறித்த கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. (05)

---

# மாறுபட்ட நிலைப்பாட்டாளர்களைத் துரோகிகளாக சித்திரிக்கும் பண்பு தமிழ் அரசியல்வாதிகளிடமுண்டு!

## விக்கினேஸ்வரன் வேதனை



தம்மில் இருந்து மாறுபட்டு சிந்திப்பவர்களை துரோகிகளாகவோ அல்லது அரசாங்க அணியில் பயணிப்பவராகவோ அடையாளப்படுத்துகின்ற பண்பு ஏதோவொரு வழியில் எமது தமிழ் அரசியல்வாதிகளிடம் வந்துவிட்டதாக சுட்டிக்காட்டியுள்ள தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன், மாறுபட்ட நிலைப்பாட்டாளர்களைத் துரோகிகளாகச் சித்திரிப்பது எமது தரப்பிலுள்ள பலவீனத்தையே காண்பிக்கின்றதுஎன்றுதெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கட்சிகளால் நிராகரிக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நீங்கள் ஏன் அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்தீர்கள்? ஏனைய தமிழ்த்தேசியக் கட்சிகள் அதற்கு எதிர்மறையாகக் கருத்து வெளியிடவில்லையா? என்று எழுப்பப்பட்டுள்ளகேள்விக்குஅளித்துள்ள பதிலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு -

அனைத்துத் தமிழ்த்தேசிய கட்சிகளும்13ஆவதுதிருத்தத்தின்உடனடி அமுலாக்கத்துக்கு இணங்கியுள்ளன. தமிழ் காங்கிரஸ் மாத்திரமே அதனை நிராகரித்துள்ளது. வடக்கு மற்றும்கிழக்கு மாகாணங்களில் தமிழ் காங்கிரஸ் உள்ளடங்கலாகப் பதிவுசெய்யப்பட்ட 13 தமிழ் கட்சிகள் உள்ளன.

தமிழ் காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய 12 கட்சிகளில் 7 கட்சிகள் தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வாக இல்லாவிட்டாலும்கூட 13 ஆவது திருத்தத்தை உடனடியாக அமுல்படுத்தவேண்டும் என்று ஆவணமொன்றில் கையெழுத்திட்டு, ஜனாதிபதியிடம்கையளித்துள்ளன. 8 ஆவது கட்சி குறித்த ஆவணத்தில் கையெழுத்திடாவிட்டாலும், அதற்கு இணங்கியுள்ளது.

இலங்கைத்தமிழரசுக்கட்சி, ரெலோ, புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய எஞ்சிய 4 கட்சிகளும் ஜனாதிபதிக்கான கடிதத்தில் கையெழுத்திடாவிடினும், அச்சுக் கட்சிகள் இதே கோரிக்கையை முன்வைத்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தன.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் இந்திய பிரதமர் தலையிடவேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டிருந்தது. எனவே அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தவேண்டும் என்ற விருப்பம் 12 கட்சிகளுக்கும் பொதுவானதாகும்.

தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வு என்ற விடயத்தில் அனைத்துத் தமிழ்த்தேசியக் கட்சிகளும் சமஷ்டி முறையின் வடிவங்களைத் தமது இறுதி இலக்காகக் கொண்டிருக்கின்றன. தமிழ் காங்கிரஸ் உள்ளடங்கலாக எந்தவொரு கட்சியும் பிரிவினையைக் கோரவில்லை. ஆகவே அரசமைப்பில் ஏற்கனவே உள்வாங்கப்பட்டுள்ள சரத்தின் அமுலாக்கத்தை முன்னிறுத்தி அரசாங்கத்துடன் ஒருங்கிணைவதை ஏனைய தமிழ்க்கட்சிகள் விரும்பத்தகாத விடயமாக நோக்கக்கூடாது.

தம்மில் இருந்து மாறுபட்டு சிந்திப்பவர்களைத் துரோகிகளாகவோ அல்லது அரசாங்க அணியில் பயணிப்பவராகவோ அடையாளப்படுத்துகின்ற பண்பு ஏதோவொரு வழியில் எமது தமிழ் அரசியல்வாதிகளிடம் வந்துவிட்டது. குறித்தவொரு நபர் எமது நிலைப்பாட்டிலிருந்து மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும், அவர் என்ன கூறுகின்றார் என்பதைப் புரிந்துகொள்வதற்குப் பொறுமை அவசியமாகும். மாறாக, அத்தகைய மாறுபட்ட நிலைப்பாட்டாளர்களைத் துரோகிகளாகச் சித்தரிப்பது எமது தரப்பிலுள்ள பலவீனத்தையே காண்பிக்கின்றது.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழ் புத்திஜீவிகள் எமது அரசியல் இலக்குகள் எத்தகையதாக அமையவேண்டும் என்ற கருத்தாடலையும் தர்க்கத்தையும் எம்மக்கள் மத்தியில் உருவாக்குவது பெரிதும் பயனுடையதாக அமையும். சமஷ்டி முறைமையைப் பரிந்துரைப்பவர்கள், அதனை ஆதரிப்பதற்கான விடயங்களைக் கொண்டிருப்பர். இருப்பினும் சமஷ்டியை பிரிவினை என்று நம்பும் சிங்கள பேரினவாத அரசாங்கத்துக்கு, இது தொடர்பாகப் பொறுமையாக அறிவூட்டவேண்டும். எனவே 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதென்பது இப்பாதையை நோக்கிய முதற்படியாக அமையும் என்று தெரிவித்துள்ளார். (05)

---

# கட்சி என்ற ரீதியில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம்

## காமினி லொகுகே கூறுகிறார்

கட்சி என்ற ரீதியில் ஜனாதிபதியுடன் பேச்சில் ஈடுபடுவோம். தனிப்பட்ட முறையில் எவ்வித பேச்சிலும் ஈடுபடமாட்டோம்.

தேர்தலை நடத்த அரசாங்கம் தீர்மானிக்குமாயின் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன தேசிய அமைப்பாளர் பஷில் ராஜபக்ஷவுக்கும் ஆளும் தரப்பின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நெலும் மாவத்தையில் இடம்பெற்றது. இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்பு வழங்குவோம். முறையற்ற தீர்மானங்களுக்கு ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை.

இலாபமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் கட்சி மட்டத்தில் உள்ளக பேச்சில் ஈடுபட்டுள்ளோம். எதிர்வரும் வாரம் சகல தொழிற்சங்கங்களுடன் பேச்சில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம்.

இலாபமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் தீர்மானம் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானத்தில் உறுதியாக உள்ளோம்.தேசிய வளங்களை தனியார் மயப்படுத்தும் கொள்கை எமக்குக் கிடையாது.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கட்சி என்ற ரீதியில் பேச்சில் ஈடுபடுவோம். தனிப்பட்ட முறையில் பேச்சில் ஈடுபடமாட்டோம். அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தும் நோக்கம் எமக்குக் கிடையாது. தேர்தலை நடத்த அரசாங்கம் தீர்மானிக்குமாயின் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். - என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# லீடர் அஸ்ரப் வித்தியாலய மாணவர்களுக்கு பாடசாலை பாதணிகள் வழங்கும் நிகழ்வு







(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்த மருது கமுஃகமுஃ லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலய வசதி குறைந்த மாணவர்களுக்கு பாடசாலை பாதணிகள் வழங்கும் நிகழ்வும், தெரிவு செய்த மாணவர்களின் பெற்றோர்கள் சந்திப்பும் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் இன்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கை (சாய்ந்தமருது) சகோதரி ஒருவரின் உதவியால் கிடைப்பெற்ற இந்த பாடசாலை பாதணிகள் வழங்கும் நிகழ்வில் அல்-மீஸான் பௌண்டன் தவிசாளர், ஊடகவியலாளர் யூ.எல்.என்.நூருல் ஹுதா, பாடசாலை பிரதியதிபர் எஸ்.எம்.சுஜான், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு செயலாளர், பகுதித்தலைவர்கள், ஆசிரிய ஆசிரியைகள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன், மாணவர்களின் கல்விக்கு சீருடை தடையாக இருக்கக் கூடாது என்ற அடிப்படையில் இந்த பாதணிகள் வழங்கப்படுகின்றன எனவும், மாணவர்கள் கல்வியில் தமது முழுமை யான ஈடுபாட்டைக் காட்டி தமது இலக்கை அடைய முழுமையாக அர்ப்பணித்து கல்வி கற்கவேண்டும்என்றும்கேட்டுக்கொண்டார். மேலும், குறித்த பாதணிகளை வழங்கிய தனவந்தருக்கு நன்றிகளை தெரிவித்த அவர், இந்த பாடசாலையின் கடந்த கால அடைவுகள் மற்றும் எதிர்கால இலக்குகள் பற்றி பெற்றோருக்கு விளக்கியதுடன் பாடசாலைவளர்ச்சிமற்றும்மேம்பாட்டிலும் பெற்றோர்கள்கரிசனைசெலுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் பெற்றோர்களின் அலட்சிய மான சில நடவடிக்கைகள் பிள்ளைகளை தவறான பாதைக்கு கொண்டு செல்வதையும், இப்போது அதிகரித்து வரும் போதைப்பொருள்பாவனையிலிருந்துதமது பிள்ளைகளைப் பாதுகாக்க பெற்றோர்கள் விழிப்புடன் இருக்கவேண்டிய அவசியம் மற்றும் முக்கிய பல கண்காணிப்புக்கள் தொடர்பிலும் உரையாற்றிய அல்-மீஸான் பௌண்டன் தவிசாளர், ஊடகவியலாளர் யூ.எல்.என்.நூருல்ஹுதா, மாணவர்களின் கல்வியில் இப்பாடசாலையின் வகிபாகம், பாடசலையின் உயர்ச்சி பாதை, அதிபர் மற்றும் பாடசாலை முகாமைத்துவ குழுவின் அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை பாராட்டி பேசினார். தொடர்ந்தும் இந்த பாடசாலை மேம்பாட்டுக்கு பெற்றோர்களின் பங்களிப்பும், ஏனைய நலன்விரும்பிகளின் உதவிகள் தொடர்பிலும் உரையாற்றியதுடன் பாதணிகளைவழங்கியதனவந்தருக்குதமது நன்றிகளையும் பிரார்த்தனைகளையும் தெரிவித்தார். (05)

## தென்கிழக்கு பல்கலைகழக ஊழியர் சங்கத்தின் புதிய தலைவராக முஹம்மது தாஜுதீன் தெரிவு

தென்கிழக்கு பல்கலைகழக ஊழியர் சங்கத்தின் 23 ஆவது வருடாந்த ஒன்றுகூடல் கடந்த வியாழக்கிழமை ஒலுவில் வளாக தொழில்நுட்பபீட கேட்போர் கூடத்தில் சங்கத்தின் தலைவர் எம்.எம்.நௌபர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கலந்துகொண்டு உரையாற்றினார். நிகழ்வில் கௌரவ அதிதிகளாக பிரதிப் பதிவாளர் எஸ்.சிவக்குமார் மற்றும் பதில் நிதியாளர் சீ.எம்.வன்னியாராச்சி ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இரண்டு அமர்வுகளாக இடம்பெற்ற நிகழ்வின்முதல்அமர்வில்பல்கலைக்கழகத்தில் தங்களது 25 வருடகால சேவையைப் பூர்த்தி செய்தவர்களும் சேவைக்காலத்தின்போது மிகக் குறைந்தளவான விடுமுறையை எடுத்தவர்களும் இங்கு கடமையாற்றி வேறு பல்கலைகழகங்களுக்கு பதவி உயர்வு பெற்றுச்சென்றவர்களும் ஊழியர் சங்கத்தால் பாராட்டி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் இரண்டாவது அமர்வின்போது புதிய ஆண்டுக்கான நிர்வாக தெரிவு இடம்பெற்றது. குறித்த தெரிவில் சில பதவிகளுக்காக உறுப்பினர்கள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

சில பதவிகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பித்திருந்ததன் காரணமாக குறித்த பதவிகளுக்கு உறுப்பினர்களைத் தெரிவதற்காக இடம்பெற்ற தேர்தலின்போது அதிகப்படியான வாக்குகளைப்பெற்று புதிய தலைவராக சிரேஷ்ட உத்தியோகத்தர் எம்.ரீ. முஹம்மது தாஜுதீனும்செயலாளராகஎம்.எம்.முஹம்மது காமில் உள்ளிட்டவர்களும் தெரிவாகினர்.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் வருமாறு:

தலைவர்: எம்.ரீ.முஹம்மது தாஜுதீன், உபதலைவர்: எம்.சீ.அப்துல் கபூர் செயலாளர்: எம்.எம்.முஹம்மது காமில் உப செயலாளர்: எம்.எல்.றினாஸ், உப செயலாளர் பிரயோக விஞ்ஞான பீடம்: பி.எம்.ஹிதாயத்துல்லாஹ் பொருளாளர்: ஏ.முஹம்மது றினோஸ், நலன்புரி இணைச்செயலாளர் ஆண்: எம்.ஆர்.முஹம்மது றம்னாஸ் நலன்புரி இணைச்செயலாளர் பெண்: ஏ.ஆர்.ஜிப்ரியா நௌபர் உள்ளக கணக்குப் பரிசோதகர்: எம்.ரீ.ஹாஸீர் முகம்மட் நிருவாக உத்தியோகத்தர்கள் பதிவாளர் பகுதி 1: எம்.ஜி.றோஷான், பதிவாளர் பகுதி 2: ஏ.ஏ.முகம்மது புசைல் நிதியாளர் பகுதி ஏ.எல். சதக்கத்துல்லாஹ் முகாமைத்துவ வர்த்தக பீடம்: ஜெ.ஆப்தீன் கலை கலாச்சார பீடம்: வை.முபாறக் இஸ்லாமிய கற்கை மற் றும் அரபு மொழி பீடம்: முகம்மது அஷ்ரப் பிரயோக விஞ்ஞான பீடம்: ஏ.முகம்மட் றம்ஸான் தொழில்நுட்ப பீடம்: எஸ்.றிபாய்தீன் பொறியியல் பீடம்: ஐ.எல்.எம்.றிஸ்கான் சாரதிகள் பிரிவு: இசட் அப்துல் லாபீர் பிரதான நூலக பிரிவு: எம்.ஏ.முகம்மட் இஸ்மாயில் பாதுகாப்புப் பிரிவு: ஏ.எல்.றிஸ்வான் ஆய்வுகூட பிரிவு: ஐ. ஜௌபர் களஞ்சியப் பிரிவு: எம்.எம். முஹம்மது றம்ஸீன் பராமரிப்புப் பிரிவு: ஏ.எல்.கமால்தீன் நில அலங்காரப் பிரிவு: எம்.ஐ.தாஹிர் நலன்புரி உடற்கல்விப் பிரிவு: ஐ.எல்.றுக்சான் வெளிவாரி கற்கைகள், பணியாளர் மேம்பாடு மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு: எம்.எச்.முகம்மது நஸார் (05)

## மாதர் கிராம அபிவிருத்தி சங்க ஏற்பாட்டில் மர நடுகை நிகழ்வு



காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜனின் வழிகாட்டுதலின் கீழ் காரைதீவு பிரதேச செயலக நடராஜானந்தா மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் மர நடுகை நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் த.கமலநாதனால் மரக்கன்றுகள் நாட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் போது அங்கத்தவர்கள் 24 பேருக்கு ரூபா 1,750,000 கடன் வழங்கியதுடன், 24 பழ மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டது.

மற்றும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவியும் கௌரவிக்கப்பட்டார். (05)

## ஆளுநர் மக்கள் குறைதீர்க்கும் பிரிவு கிழக்கு மாகாண சபையில் திறப்பு




(அபு அலா)

கிழக்கு மாகாண சபையில், கிழக்கு ஆளுநரின் பொது மக்கள் குறைதீர்க்கும் பிரிவு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து உடனுக்குடன் தீர்வு வழங்கும் முகாமாக இந்த ஆளுநரின் பொது மக்கள் குறைதீர்க்கும் பிரிவு ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பொதுமக்கள் இந்தப் பிரிவை நேரடியாக அணுகித்தமது குறைகளை ஆளுநருக்கு நேரடியாகத் தெரியப்படுத்த முடியும். உடனுக்குடன் அவற்றுக்கு ஆளுநரின் நேரடிக் கண்காணிப்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## கல்முனையன்ஸ் போரமினால் குடிநீர் இணைப்புகள் கையளிப்பு



'கல்முனை பிராந்திய மக்களின் அடிப்படை தேவைகளில் தன்னிறைவடைதல்' எனும் கல்முனையன்ஸ் போரமின் இலக்கை அடையும் முகமாக பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் ; முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அந்த வகையில் தேவையுடைய இணங்காணப்பட்ட 15 பயனாளிக் குடும்பங்களுக்கான குடிநீர் இணைப்புகள் அண்மையில் கையளிக்கப்பட்டிருக் கின்றன.

கல்முனையிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் சுத்தமான குடிநீர் இணைப்பை கொண்டு சேர்க்கும் நோக்கில் கடந்த 2017 ஆம் ஆண்டு கல்முனையன்ஸ் போரமினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் இதுவரையிலும் சுமார் 135 பயனாளிக் குடும்பங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 2016 ஆம் ஆண்டு கல்முனையன்ஸ் போரமினால் முன்னெடுக்கப்பட்ட கல்முனைக்கான கல்வி, சமூக, பொருளாதார தனிநபர் தகவல் திரட்டின் மூலம் இணங்காணப்பட்ட குடும்பங்களே இந்தச் செயற்றிட்டத்துக்கான பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# இலங்கையின் தேசிய பாரம்பரியத்தை அரசிடம் இருந்து காப்பாற்றி உதவுக!

## யுனைஸ்கோவிடம் கம்மன்பில கோரிக்கை

'இலங்கையின் தேசிய பாரம்பரியத்தை இலங்கை அரசாங்கத்திடம் இருந்து பாதுகாக்க உதவுமாறு' ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாச்சார ஸ்தாபனத்திடம் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கடிதத்தின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தொல்பொருள் புராதனச் சின்னங்களை அரசாங்கத்திடம் இருந்து பாதுகாக்க வேண்டிய நிலைக்குப் பொதுமக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தொல்பொருள் பகுதியொன்றுக்கு காணிகளை வழங்குவது தொடர்பில் எழுந்த பிரச்சினையின்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மானதுங்கவைக் கடுமையாகச் சாடினார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று சில நாள்களிலேயே பேராசிரியர் தனது பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்துள்ளார்.

'நாங்கள் பாரம்பரிய தளங்களை பிரிவினைவாதிகள் அல்லது தீவிரவாதிகளிடமிருந்து பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம், எங்கள் சொந்த அரசாங்கத்தால் அல்ல, இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களின் தவறான மற்றும் தவறான செய்திகளை எந்தவித தயக்கமும், கேள்வியும் இன்றி ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## ஆங்கிலத்தை.....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

அல்லது 4 வருடகங்களா என்பதைதீர்மானிக்கவேண்டும். அதேபோல் அரச பல்கலைக்கழகங்களை நவீனமயப்படுத்தவேண்டும்.

தற்போது, ஆண்டுக்கு சுமார் 40,000 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். மேலும் ஒரு குழுவினர் வெளிநாடு செல்கிறனர். இன்னும் சிலர் உயர்கல்வி நிறுவனங்களில் உள்ளனர். எனவே, அரச பல்கலைக்கழகங்கள், தேசிய பல்கலைக்கழகங்களைப் போன்று அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கும் நாம் வாய்ப்புகளை வழங்குகிறோம்.

அவ்வாறு, அரசசார்பற்ற பல்கலைக்கழகங்கள்மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் நிறுவப்படவேண்டுமாயின், அந்தநிறுவனங்களில்கல்வி கற்கும் மாணவர்களுக்கு இலகு வட்டி அல்லது வட்டியில்லா கடன் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நம் நாட்டில் தான் ஒரு மாணவர் கற்க வேண்டிய பாடத்தை அரசாங்கம் தீர்மானிக்கிறது. ஏனைய எல்லா நாடுகளிலும் உள்ள மாணவர்கள் தாங்கள் விரும்பும் பாடத்தைத் தேர்ந்தெடுக்க உரிமை உண்டு. அந்த முறையை நாம் உருவாக்க வேண்டும்.

இன்னும் 15-20 வருடங்களில் வகுப்பறை எவ்வாறு இருக்கும் என்று யாராலும் கூற முடியாது. தற்போதுஇருக்கும்செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்பத்துடன் நாம் எவ்வாறு முன்னேற முடியும் என்று பார்க்க வேண்டும். Chat GPT காரணமாக எதிர்காலத்தில், கற்பித்தல் முறைகளும் முற்றிலும் வேறுபடும். நாம் பெரும் மாற்றத்தின் சகாப்தத்தில் இருக்கிறோம். எனவே அந்த தொழில்நுட்பத்துடன் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும்' - என்றார்.

## மண்மேடு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் காலி - ஹில்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய குடும்பஸ்தரும், 25 வயதுடைய இளைஞருமே உயிரிழந்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## தெற்கிலுள்ள .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர் விடுதியின் தரைத் தளத்தில் அவரது சடலம்



காணப்பட்டுள்ளது.

விடுதியின் மேல் தளத்தில் உறங்கிக் கொண்டிருந்த மாணவன் ஒருவர் நேற்று அதிகாலை 4:30 மணியளவில் எழுந்து கீழே வந்து கொண்டிருந்தபோது குறித்த மாணவனின் சடலத்தைக் கண்டு அச்சமடைந்து ஏனையோருக்குத் தெரியப்படுத்தினார்.

இதையடுத்து மற்ற மாணவர்களும்வந்துமாணவன் உயிருடன் இருப்பதாக நினைத்து கயிற்றை அறுத்து மீட்புநடவடிக்கையில் ஈடுபட்டனர்.எனினும்,மாணவனின் உயிர்பிரிந்திருந்தது. சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அதன் அதிகாரிகள் வந்து விசாரணைகளை ஆரம்பித்தனர்.

நுகேகொட குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள்சம்பவஇடத்துக்கு வந்து விசாரணைகளை



ஆரம்பித்ததுடன், நீதி வான் விசாரணையும் நடத்தப்பட்டது.

மரணத்துக்கான காரணம் இதுவரை உடனடியாகத் தெரியவரவில்லை.

இதேவேளை, பேராதனைப்பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் முதலாம் வருட மாணவன் ஒருவர் நேற்றுக் காலை பல்கலைக்கழகத்துக்குள் தூக்கில்தொங்கியநிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பேராதனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், தென்மராட்சி - வரணியைச் சேர்ந்தநற்குணராசா குகதீஸ் என்றமாணவனின்சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது..

பொறியியல் பீட மாணவர்கள் தங்கும் அக்பர் மண்டபத்தில் அவர் தங்கியிருந்த அறையின் கழிவறையில் அவரது சடலம் தூக்கில் தொங்குவதைப் பார்த்த மாணவர்கள்பல்கலைக்கழக பாதுகாப்புப் பிரிவினருக்குத் தகவல் தெரிவித்தனர்.

பேராதனைப் பல்கலைக்கழக நிர்வாகமும் பேராதனைப்பொலிஸாரும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்ட அதிகாரியாகவும், பின்னர் மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளராகவும்கிழக்கு மாகாணகூட்டுறவுதிணைக்கள ஆணையாளராகவும் பணியாற்றியுள்ளார்

## ஊடக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டம் என்பது தேவையில்லை. ஜனநாயகவழியில் உண்மையை ஊடகங்கள் வெளிக் கொண்டு வரும் நிலையில் அதைத் தடுக்கும் நோக்கத்திற்க்காக இதை கொண்டு வருகின்றார்கள். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

அத்துடன், இலங்கையின் பொருளாதாரக் கொள்கையில் நீண்ட கால கொள்கை இல்லை.

ஆட்சியாளர்கள் தாங்கள் நினைத்தவாறு தீர்மா னங்களை எடுத்து தங்களது ஆட்சியை தக்க வைப்பதற்காக பௌத்த இராணுவ மேலாதிக்கத்தின் அடிப்படையில் தீர்மானங்களை எடுத்து வருகிறார்கள். பல அரச நிறுவனங்களால் ஆட்சிக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை எடுப்பதற்குப் யாரும் முன்னுக்கு வரமாட்டார்கள். இந்த நிறுவனங்கள்

தொடர்பாக ஆட்சியாளர்கள் பரிசீலனை செய்ய வேண்டும்.

இவைதவிர, 1994 ஆம் ஆண்டு செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வீரபுரம் மக்களுக்காக 400 ஏக்கர் காணிகள் ஒதுக்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரத்திற்காக ஒரு ஏக்கர் வழங்கப்படும் எனக் கூறி குடியமர்த்தினார்கள்.இன்னும் அந்த மக்களுக்கு காணிகள் வழங்கப்படவில்லை.

ஒதுக்கப்பட்டகாணிகளில் 75 வீதமான காணிகளை வவுனியா தெற்கைச்சேர்ந்த பெரும்பான்மை யினத்தை சேர்ந்த சிங்கள மக்கள் அபகரித்துள்ளார்கள்.

இது தொடர்பாக மாவட்ட அபிவிருத்திகுழுக்கூட்டத்தில் பேசியிருந்தேன்.

மதுராநகர் மக்கள் காணி இல்லை என குடியேறுகின்றபோது அதற்கு வவுனியா தெற்கு பௌத்த மதகுரு அனுமதித்தால் தான் காணி வழங்க முடியும் என மாவட்ட செயலகத்தில் எனக்குபதில்வழங்கப்பட்டது. ஆனால் வீரபுரத்தில் எமது காணிகளை அவர்கள் பிடிக்கிறார்கள். இது நிறுத்தப்பட்டு வீரபுரம் மக்களுக்கு அந்த காணிகள் பகிர்த்தளிக்கபட வேண்டும் எனத் தெரிவித்தார். (100)

## ஊழல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை நாடாளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகச்சட்ட மூலம் தொடர்பான இரண்டாம் மதிப்பீட்டு விவாதம் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை ஆளும் தரப்பினால் கொண்டு வரப்படும் சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் இடம்பெறும்.

ஜூன் 21 மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணிவரை ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு, குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மற்றும் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு ஆகியவை தொடர்பான விவாதம் என்பன இடம் பெறவுள்ளன. பின்னர் பி.ப 5.30மணிக்குஅத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டத்தின் கீழ்தீர்மானம் விவாதமின்றி அங்கீகரிக்கப்படவுள்ளது.

ஜூன்22வியாழக்கிழமை மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப் பட்டுள்ளது. அதன் பின்னர் மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.30 மணிவரை ஜனாதிபதியால் 2023.06.01அன்று பொதுமக்களுக்கு ஆற்றிய உரை தொடர்பில் எதிர்க்கட்சி கொண்டுவரும் சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

ஜூன் 23 வெள்ளிக்கிழமை முழுவதும் மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அனுதாபப்பிரேரணைக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மு.ப 9.30 மணி முதல் பி.ப5.30மணிவரைமறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான லெரீன் பெரேரா, ரெஜினோல்ட் குரே, புத்திக குருகுலரத்ன, ஐமுத்து சிவலிங்கம்ஆகியோர்குறித்த அனுதாபப்பிரேரணைக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## கூப்பிட்டதும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரச் சொன்னவுடன் ஏன் விழுந்தடித்து போகிறார்கள்?. அவ்வாறு சென்று பேசிவிட்டு பின்னர் ஏன் ஏமாற்றம் எனச் சொல்கிறார்கள்? .

வரச் சொன்னவுடன் விழுந்தடித்து முதலில் போவதும்பின்னர்ஏமாற்றம் எனச் சொல்வதும் தொடர் கதையாகவே உள்ளது. ஆகையினால்தான் இவ்வாறான சந்திப்புக்கு விழுந்தடித்துக் கொண்டு ஏன் போகிறீர்கள் என நங்கள் கேட்கிறோம்.

உண்மையில் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஆட்சியில் இருக்கின்ற தரப்புக்கள் தொடர்ந்தும் ஏமாற்றுகிறார்கள் என்றால் பேரம் பேசல்களோ நிபந்தனைகளோ விதிக்காமல் சம்பந்தன் செயற்படுவதன் நோக்கம்என்னஎன்றகேள்வி எழுகிறது.

ஆக மொத்தத்தில் இந்த ஆட்சியாளர்களின் தமிழின அழிப்பிற்கு இவர்கள் துணை போகிறார்கள் என்பதே உண்மை.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை நாங்கள் மட்டுமே வெளிக்கொண்டு வருகின்றோம். தமிழ் மக்களிற்கு எதிராக ஆட்சியாளர்களின் செயற்பாடுகளை தமிழ் மக்களிடத்தே இருக்கின்ற மற்றைய அரசியல் தரப்புகள் கண்டு கொள்வதில்லை.

அதே நேரத்தில் தமிழ் மக்களைபிரதிநித்துவப்படுத்தி இன்றைக்கு வடகிழக்கில் இருக்கின்ற 18 பாராளுமன்ற உறுப்பினர்களில் 16 பேர் ஆட்சியாளர்களின் இத்தகைய தமிழின் விரோத செயற்பாடுகளுக்கு துணை போகின்ற நிலைமையில் நாங்கள் 2 பேர் தான் அதற்கு எதிராக இருக்கின்றோம்.

அதே நேரத்தில் அரசிற்கு துணைபோகின்றதரப்புகளும் எமது போராட்டங்களைக் கொச்சைப்படுத்த முயல்கின்றன. ஆனால் ஆட்சியாளர்கள் பயப்பீதியை ஏற்படுத்தினாலும், சில தரப்புகள் கொச்சைப்படுத்தினாலும் நாம் எதற்கும் பின்வாங்கப் போவதில்லை.

அதிலும் எமது எதிர்ப்பு போராட்டங்களை கொச்சைப்படுத்துகின்ற தரப்புகள் ஏதாவது எதிர்ப்பு போராட்டங்கள் செய்கின்றனரா என்று பார்க்க வேண்டும். அவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கைகள் செய்வதற்கு அவர்கள் தயாரில்லை. ஏனெனில் அரசினது செயற்பாடுகளை எதிர்க்க அவர்கள் தயாரில்லை. அது மட்டுமல்லாது அரசினது செயற்பாடுகளை மக்களையும் ஏற்க வைக்கும் வகையிலேயே அவர்களது நடவடிக்கைகள் அமைகிறது - என்றார்.

## காணி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவையில்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின்நூற்றாண்டு தொடக்க விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கலாசாலையின் நூற்றாண்டுச்சின்னத்தினை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார். இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

2013 ஆண்டு இராணுவத்தினரின் பயன் பாட்டிற்காக அரசுடமை யாக்கும் நோக்கில் வர்த்த மானி வெளியிடப்பட்ட சுமார் 6300 ஏக்கர் காணிகளில் கணிசமானவை தற்போது விடுவிக்கப்பட்டு காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. எனினும், குறித்த காணிகள் சட்ட ரீதியாக அரச காணிகளாகவே இப்போதும் காணப்படுகின்றமையினால், 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சட்ட வர்த்த மானியை மீளப் பெறுகின்ற வகையில் புதிய வர்த்தமானி வெளியிட வேண்டியிருக்கின்றது.

இதுதொடர்பாக, அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் விரிவாக கலந்துரையாடிய நிலையில், 2013 வர்த்தமானியை மீளப்பெறுவதற்கும், தற்போதும் விடுவிக்கப்படாமல் இருக்கின்ற காணிகளில் முடிந்தளவு காணிகளை விடுவிப்பதற்கும் காணி அளவீடுகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவேகாணி அளவீடுகள் மேற்கொள்ளப்படும்போது மக்கள்பரபரப்படையத் தேவை யில்லை.

அதேபோன்று, போதைப் பொருள் பாவனை மற்றும் சமூகச் சீர்கேடுகள் எங்களுடைய சமூகத்தில் அச்சுறுத்தும் விவகாரமாக மாறியிருக்கின்றது. இதிலிருந்து எமது சமூகத்தை பாதுகாக்க வேண்டிய பாரிய சமூகக் கடமை எங்கள் எல்லோருக்கும் இருக்கின்றது.

இதுதொடர்பான விசேட கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றிருந்தது. குறித்த கலந்துரையாடலில் எமது சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல்வேறு தரப்பினரும்கலந்துகொண்டு தங்களின் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். அவ்வாறு கருத்து வெளியிட்டவர்களில் பெரும்பாலானவர்கள் எமது பிரதேசத்தில் புனர்வாழ்வு மையம் ஒன்றினை அவசியத்தினை வலியுறுத்தி இருந்தனர். என்னுடைய நிலைப்பாடும் அதுவாகவே இருக்கின்ற நிலையில், குறித்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளேன்.

இந்நிலையில், இங்கு கூடியிருக்கின்ற ஆசிரிய மாணவர்களும் ஒரு கோரிக்கையை முன்வைக்கவிரும்புகின்றேன். அதாவது நீங்கள் எல்லோரும் கற்றல் கற்பித்தல் என்பதற்கு அப்பால், எமது சமூகத்தை அரோக்கியமாக முன்கொண்டுசெல்வதற்கான விழிப்புணர்வு மற்றும் தெளிவூட்டல் முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும் - என்றார்..

## வவு. .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மெனிக்பாம், ஆண்டியா புளியங்குளம்என்பவற்றைத் தனி கிராம அலுவர் பிரிவுகளாக பிரிப்பதற்கும், கலாபோகஸ்வேவ உள்ளிட்ட 4 சிங்கள குடியேற்ற கிராமங்களின் நிர்வாக நடவடிக்கையை வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைப்பதற்கும்தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், நாடாளுமன்ற உறுப்பினர்செல்வம் அடைக்கலநாதன், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சிமன்றங்களில் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (100)

# முதல் மருத்துவர், இரு பொறியாளர்களுக்கு கிளிநொச்சி ம.வியில் நேற்று மதிப்பளிப்பு



கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கணித, விஞ்ஞான பிரிவு உருவாக்கப்பட்ட முதல் ஆண்டில் தெரிவாகி மருத்துவர் மற்றும் பொறியாளர்களாக வெளியேறியவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று பாடசாலையில் இடம்பெற்றது.

இந்தப்பாடசாலையில் 2013ஆம் ஆண்டு கணித விஞ்ஞான பிரிவு தொடங்கப்பட்டது.

2015ம் ஆண்டு உயர் தரப் பரீட்சைக்குக்குத் தோற்றிய பாடசாலையின் முதலாவது உயர் தர மாணவர்களில் இருந்து உயர் பெறுபேறுபெற்ற கர்சிகா யசோதரன் என்ற மாணவி தனது மருத்துவக் கல்வியை முடித்துத் தற்போது மருத்துவராக வெளியேறி இருக்கிறார்.

இவரே மகாவித்தியாலயத்திலிருந்து தெரிவான முதலாவது மருத்துவராவார்.

அதேயாண்டிலல் இராசேந்திரன் மதுசனன், முத்தையா ருசாந்தன் ஆகிய இருவரும் பாடசாலையிலிருந்து முதல் தடவையாக பொறியில் துறைக்குத் தெரிவாகியிருந்தனர். இவர்கள் இருவரும் இப்போது பட்டப்படிப்பினை முடித்துள்ளனர்.

இந்த மூவருக்கும் மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலைமாணவர்ஒன்றுகூடலின்போதுஇடம்பெற்றதது.





பாடசாலை முதல்வர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மருத்துவ மற்றும் பொறியில் படிப்பை நிறைவு செய்த மாணவர்களுக்கு நினைவு சின்னங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் பாடசாலை முதல்வர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். வைத்தியரான கர்சிகா யசோதரன் மாணவர்களை ஊக்குவிக்கும் கருத்துக்களை வழங்கி நிகழ்வில் உரையாற்றினார்.

# முடிந்தால் கைது செய்து காட்டுங்கள் பின் என்ன நடக்குமென பார்ப்பீர்கள்

### சரத்வீரசேகரவுக்கு இப்படி சவால் விட்டார் செல்வம் எம்.பி.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை முடிந்தால் கைது செய்து காட்டுங்கள; என்னநடக்கிறதுஎன்பதைப் பார்ப்பீர்கள்.

இவ்வாறு பொது ஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கடற்படை அதிகாரியுமான சரத்வீரசேசகரவுக்குச் சவால் விடுத்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அமைச்சர் சரத்வீரசேகர அவர்கள் கடந்த காலங்களில் பல கருத்துக்களைக்கூறியுள்ளார். குறிப்பாகத் தமிழ் பிரதேசங்களில் நடைபெறுகின்ற அடக்கு முறைக்கு எதிராக குரல் கொடுக்கின்ற தமிழ் நாடாளுமன்ற

உறுப்பினர்களைக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று

சொல்லியிருக்கின்றார். மாகாணசபை முறையையும்இல்லாதுஒழிக்கவேண்டும்

என்றும் வலியுறுத்தியிருக்கிறார். காலம் காலமாகத் தமக்கு இருந்து வரும் பிரச்சனை குறித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்காகவே தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி வைக்கிறார்கள். தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்தத்தான் எங்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புகிறார்கள். அந்த

வகையில் தங்கள் மக்களின், தேசத்தின் பிரச்சினைகள் குறித்து தமிழ்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசுகின்றார்கள்.

அதற்காக அவர்களைக் கைது செய்வேன் என்று சொல்வதற்கு இவர் யார்? தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கைது செய்து சிறையில் அடைக்கச்சொல்வதற்குஇவருக்குஎன்னஉரிமை இருக்கிறது? முடிந்தால் அதை செய்து பார்க்கட்டும். படையில் அதிகாரியாக இருந்து எதையெல்லாமோ செய்துவிட்டு வந்து கொக்கரிக்கக்கூடாது. அவருக்கு நான்நேரடியாகவேசவால்விடுகின்றேன். மக்கள்நலன்சார்ந்துபேசும்நாடாளுமன்ற உறுப்பினர்களை கைது செய்யுங்கள் பார்க்கலாம். அடுத்து என்ன நடக்கும் என பார்ப்பீர்கள் - என்றார் (100)

# அரச மருந்தாளர்கள் நேற்று வேலை நிறுத்தப் போராட்டம்

அரச மருந்தாளர்கள் சங்கம்நேற்றுநாடுமுழுவதும் நேற்றுக்காலை8மணிமுதல் அடையாளவேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மருந்து ஒழுங்குமுறை அதிகார சபையின் 23 மருந்தாளர்களைஇடமாற்றம்

செய்தமைக்கு எதிராகவே இந்த அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக சங்கத்தின் தலைவர் துார ரணதேவ தெரிவித்தார்.

இதன் காரணமாகப் பல வைத்தியசாலைகளில்நோயாளர்களுக்கு மருந்துகளை

வழங்குவதற்குத் தடைகள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.06.2023இல் வெளியிடப்பெற்றது.